வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிமாற்றம்
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 223 | பக்கங்கள் : 20



08 இலங்கை அரசியல் பரப்பை பேரளவில் மாற்றிவிட்ட 100 நாட்கள்



10 ஓடுமீன் ஓடும்வரை காத்திருந்த ரணில்



11 பொதுப் போக்குவரத்து தான் இப்போது மக்களுக்கு தஞ்சம்!




16 'உய்குர்' மக்களின் தேசிய எழுச்சி:

## ரணிலை தோற்கடிக்க வேண்டும்! தமிழ்த் தேசிய கட்சிகள் சேர்ந்து!!

### சிறீகாந்தா வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 17

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஜனாதிபதி தெரிவில் யாருக்கு வாக்களித்தாலும் ரணிலுக்கு வாக்களிக்கக்கூடாது. அவரைத் தோற்கடிப்பதே இந்தக் கட்சிகளின் 13 உறுப்பினர்களின்

19

## பொலிஸ் - கடத்தல்காரர் துரத்தலால் டிப்பர் மோதியதில் எழுவர் படுகாயம்!

### நெல்லியடியில் நேற்று துயரம்

வடமராட்சி, ஜூலை 17


மணல் கடத்தலை தடுக்க பொலிஸார் டிப்பரை விரட்டிச் சென்றபோது ஏற்படுத்தப்பட்ட விபத்தில் 7 பேர் படுகாயமடைந்தனர். இதில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று அறிய வருகின்றது.

நேற்று பின்னிரவு ஒரு மணியளவில் வடமராட்சி - நெல்லியடி - மாலைசந்திப் பகுதியில்

19

# யாருக்கு ஆதரவளிப்பது என்பதை கூட்டமைப்பு கூடி முடிவெடுக்கும்!

### சித்தார்த்தன் எம். பி.



வவுனியா, ஜூலை 17

ஜனாதிபதி வேட்பாளர் அறிவித்த பின்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக கூடி சரியான முடிவை எடுப்போம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

19

## பெற்றோலின் விலையை ரூ. 110ஆல் குறைக்கலாம்!

### தொழில்சங்கங்களின் ஐக்கிய ஒன்றியம்



கொழும்பு, ஜூலை 17

உலக சந்தையில் எரிபொருளின் விலையுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் எரிபொருளின் விலை குறைக்கப்பட வேண்டும் என்று தொழில்சங்கங்களின் ஐக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர்

19

## புதிய ஜனாதிபதி தெரிவில் சுதந்திர கட்சி பங்கேற்காது!

### மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 17

ஜனாதிபதி தெரிவில் அதிகளவு வேட்பாளர்கள் போட்டியிடும் சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினர் ஜனாதிபதி தெரிவில் தமது வாக்குகளைப் பயன்படுத்த மாட்டார்கள் என்று அந்தக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்டமைப்புக்குள்

19

## அநுர யாப்பா, பொன்சேகாவும் ஜனாதிபதி பதவிக்கு போட்டி?

கொழும்பு, ஜூலை 17

ஜனாதிபதி பதவிக்காக அநுர பிரியதர்ஷன யாப்பா, சரத் பொன்சேகா ஆகியோரும் போட்டியிடவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் ஜனாதிபதி பதவிக்காகப் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி பதவிக்

19

## ஜனாதிபதி பதவி வெற்றிடம் பாராளுமன்றுக்கு அறிவிப்பு!

கொழும்பு, ஜூலை 17


நாட்டின் ஜனாதிபதி பதவி வெற்றிடமாகியுள்ளதாக பாராளுமன்றத்தின் செயலாளர் சபைக்கு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இராஜிநாமாவை அறிவிக்கவும், ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் உருவாகியுள்ளதையும் அறிவிப்பதற்காக சம்பிரதாயபூர்வமாக நேற்று பாராளுமன்றம் கூடியது.

இதன்போது, கோட்டாபய ராஜ

19

## அவசர நிவாரண திட்டத்தை ஆரம்பிக்க ரணில் தீர்மானம்!



கொழும்பு, ஜூலை 17

பொருளாதார அழுத்தத்தில் உள்ள மக்களின் சுமையை குறைக்கும் வகையில் எரிபொருள், எரிவாயு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங் கும் அவசர நிவாரண வேலைத் திட்டத்தை ஆரம்

19

## எரிபொருளுக்காக வரிசை வேண்டாம்!

### அமைச்சர் கஞ்சன

கொழும்பு, ஜூலை 17

நாட்டுக்கு எரிபொருள் கப்பல்கள் வந்தாலும் தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரே எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதனால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்

19

## புதிய ஜனாதிபதி தெரிவு; அநுரகுமாரவும் களத்தில்!



கொழும்பு, ஜூலை 17

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க அந்தக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி பதவிக்காகப் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளு

19

## இப்படியும் நடக்கிறது...!

அடுத்த சில தினங்கள், யார் யாருக்கு ஆதரவு? எவர் எவர் போட்டியிடவிருக்கின்றனர்? என்ற விடங்கள்தான் ஊடகங்களில் இடம்பிடிக்கப்போகின்றன.

பொதுஜன பெரமுனவிலிருந்து விலகி, சுயாதீனமாக செயற்படுபவர்களைத் தவிர்த்து எத்தனை பேர் இன்னமும் மஹிந்த விசுவாசிகளாக அல்லது பசில் விசுவாசிகளாக இருக்கின்றனர் என்பது நிச்சயமாக தெரியவரவில்லை.

உத்தியோகப்பற்றற்ற தகவலின்படி, எண்பத்து இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக தெரியவருகின்றது.

பாராளுமன்றில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளராக ரணில் போட்டியிடுகையில், அவருக்கு ஆதரவளிக்க பொதுஜன பெரமுனை தீர்மானித்துவிட்டது என்பதை அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் அறிவித்திருக்கிறார்.

அந்தத் தேர்தலில் ரணிலின் விடயங்களைக் கையாளும் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்த தகவலின்படி, அவருக்கு எண்பத்து இரண்டுபேரின் ஆதரவு உறுதியாகியிருக்கின்றதாம்.

எதிரணியின் வேட்பாளராக ஒருவர் களம் இறங்கினால், அவர் வெற்றிபெறுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருக்கின்றது.

ஆனால், எதிரணிக்குள் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. ஜனாதிபதி வேட்பாளராக எதிரணியின் பிரதான தலைவரான சஜித் பிரேமதாசவே வேட்பாளராக வேண்டும் என்று பலரும் கருதுகின்ற போதிலும், சுயாதீனமாக இயங்கும் மொட்டுக் கட்சியினரின் வேட்பாளராக டலஸ் அழகப்பெருமா போட்டியிடுவார் என்று அவரே அறிவித்திருக்கின்றார்.

நேற்று முன்தினம்வரை இந்த எதிரணியினர் யார் ஜனாதிபதியாவது, யார் பிரதமராவது என்பதில் ஒருமித்த கருத்துக்கு வரவில்லை என்றும், சஜித் - டலஸ் இருவருமே, தாமே ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருப்பதாகவும் எதிரணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிரணியில் ஒரு பொது உடன்பாடு எட்டப்படாமல் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடும் நிலை ஒன்று ஏற்படுமானால், ரணிலின் வெற்றி உறுதியாகிவிடும்.

ஐந்து நாட்களில் நடக்கவிருக்கும் ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலில் யார் போட்டியிடுவது என்பதில் எதிரணிகள் முட்டிமோதிக்கொண்டிருக்க, இப்போது இந்த ஐந்து நாட்களுக்குள் ஒரு பிரதமரை நியமிக்கவேண்டும் என்றும், பிரதமர் ரணில் தற்காலிக ஜனாதிபதியாகியிருப்பதால் பிரதமர் ஒருவரை உடன் தெரிவுசெய்ய வேண்டும் என்றும், அதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் ஹார்ஷ டி சில்வாவை தெரிவுசெய்யுமாறும் சிலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். பொருளியல் கலாநிதியான அவர், இன்றைய நெருக்கடிக்கு தீர்வுகாண சிறந்த தெரிவாக இருக்கும் என்றும் அவருக்காக கோரிக்கை வைப்பவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

அரசியலில் 'குள்ள நரி' என்று வர்ணிக்கப்படும் ரணில், திடீரென்று அவரை பிரதமராக நியமித்து, ஐக்கிய மக்கள் சக்திக்குள் மற்றுமொரு பிளவை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தெற்கில் இப்படி ஜனாதிபதி - பிரதமர் பதவிகளுக்காக சண்டை நடந்துகொண்டிருக்க, எமது தமிழ் தேசியக் கட்சிகள் வழக்கம்போல மாறிமாறி வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரொலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன்,

ஜனாதிபதி, பிரதமர் வேட்பாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காது என்றும், ஆனால் தமது நிபந்தனைகளை ஏற்கும் வேட்பாளருக்கு ஆதரவளிப்போம் என்றும் தெரிவித்திருக்கிறார். அது என்ன நிபந்தனை என்று அவர் சொல்லவில்லை.

இதில் கவனிக்கவேண்டியது என்னவெனில், இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எல்லாக் கட்சிகளும் தனித்தனிக் கட்சிகளாகவே கலந்துகொள்கின்றன. ஐக்கிய மக்கள் கூட்டணியில் இடம்பெற்றுள்ள மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி என்று கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் எல்லாமே தனித்தனிக் கட்சிகளாகவே கலந்துகொள்கின்றன. அதனால்தான் கூட்டமைப்பின் சார்பில் ஒருவர் கலந்துகொள்ளாமல், கூட்டமைப்பிலுள்ள மூன்று கட்சிகளின் சார்பிலும் ஒவ்வொருவர் கலந்துகொள்கின்றனர். ஆனால், அவ்வாறு கலந்துகொள்கின்ற தலைவர்களும் கூட்டம் முடிந்த பின்னர் கருத்துச் சொல்லும்போது கூட்டமைப்பின் சார்பிலேயே கருத்துச் சொல்கின்றனர்.

தமது நிபந்தனைகளை ஏற்கின்ற வேட்பாளரை ஆதரிப்போம் என்கின்றது ரெலோ. ஆனால், தமிழரசின் சார்பில் கலந்துகொண்ட சுமந்திரனோ, வேட்பாளர்கள் யார் யார் என்பது தெரியவந்த பின்னரே யாரை ஆதரிப்பது என்பதை கூட்டமைப்பு முடிவுசெய்யும் என்கின்றார்.

ஒரே அமைப்பாக - கூட்டமைப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற மூன்று கட்சிகளே தத்தமக்கு விரும்பியவாறு கருத்துச் சொல்லிக்கொண்டிருக்க, யாழ்ப்பாணத்திலுள்ள மதத்தலைவர்களும், சிவில் சமூகத்தினரும் இந்த நேரத்தில் தமிழ் தேசியக் கட்சிகள் என்ன செய்ய வேண்டும் என்று தத்தமது விருப்பத்தை கூறிக்கொண்டிருக்கின்றனர்.

ஒன்றாக இயங்குகின்ற மூன்று பேருமே ஒத்த கருத்தை - முடிவை எடுக்காதபோது, இவர்களிடையே கூட ஒத்த கருத்தை ஏற்படுத்த முடியாதபோது - நாம் எல்லா தமிழ் தேசியக் கட்சிகளையும் ஒருமித்த முடிவை எடுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றோம்!

ஏற்கனவே இந்தப் பத்தியில் ஒரு நண்பர் சொன்னதுபோல, பாவம் தமிழ் மக்கள்!

**- ஊர்க்குருவி**

## ரூ. 6 இலட்சம் கோடி கடனை கோட்டா அரசு பெற்றது ஏன்?

### தென்னிலங்கை ஊடகம் கேள்வி

கொழும்பு, ஜூலை 17

நம்ப முடியாத அளவுக்கு இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆறு இலட்சம் கோடி ரூபாய் கடனைப் பெற்றுள்ளது. இந்த கடனை எவ்வாறான செலவுகளுக்கு பயன்படுத்தினார்கள் என்ற பெரும் கேள்வி எழுந்துள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

மேலும், கடந்த 2021 ஆம் ஆண்டின் இறுதியில், அரசாங்கத்தின் மொத்தக் கடன் சுமை 17.6 ட்ரில்லியனுக்கு அருகில் இருந்தது மற்றும் ஏப்ரல் இறுதிக்குள் அது கிட்டத்தட்ட ஆறு ட்ரில்லியன் அதிகரித்து, 23.3 ட்ரில்லியனாக உள்ளது.

இந்த ஆண்டு, மதிப்பிடப்பட்ட மொத்த அரசாங்க செலவீனம் ஐந்து ட்ரில்லியனுக்கும் குறைவாக இருந்தது, மேலும் கிட்டத்தட்ட ஆறு ட்ரில்லியன் கடனாக இருந்தது.

மத்திய வங்கி வெளியிட்டுள்ள வாராந்த பொருளாதார அறிக்கையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## எரிபொருளுக்காக இரு நாட்கள் வரிசையில் காத்திருந்த சாமிக!

கொழும்பு, ஜூலை 17

இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய நட்சத்திரமான சாமிக கருணாரத்ன, கடந்த இரண்டு நாட்களாக எரிபொருள் வரிசையில் காத்து நின்றார் என்று சர்வதேச ஊடகங்கள் நேரலையில் செய்தி வெளியிட்டுள்ளன.

எரிபொருள் கிடைக்காமையால் அவர் துடுப்பாட்ட பயிற்சிக்கு கூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சி)



## எரிபொருளைப் பெறுவதற்கு அனுமதிப் பத்திரம் அவசியம்!

### இணையத்தில் பதிவு செய்து பெறவேண்டும்!

கொழும்பு, ஜூலை 17

தேசிய எரிபொருள் அனுமதி பத்திரத்துக்கான கியூ. ஆர். (QR) குறியீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு http://fuelpass.gov.lk என்ற இணையதளத்துக்குப் பிரவேசித்து, தமது வாகனங்களைப் பதிவு செய்ய வேண்டுமென வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு தேசிய அனுமதிப் பத்திரத்திற்கான பத்திர நடைமுறை குறித்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

டீசல் கப்பல் வருகை தந்துள்ளது என்பதற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனங்களுக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கருகில் வரிசையில் காத்திருக்க வேண்டாம்.

""தேசிய எரிபொருள் அனுமதி பத்திர முறைமை"" நடைமுறைக்கு வந்ததன் பின்னரே சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வழங்கப்படும்.

தேசிய எரிபொருள் அனுமதி பத்திரத்திற்கான கியூ. ஆர். குறியீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு http://fuelpass.gov.lk என்ற இணையதளத்திற்குள் பிரவேசித்து , தமது வாகனங்களைப் பதிவு செய்ய வேண்டும். நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் சீராகும் வரை பேருந்து, புகையிரதங்கள் தவிர்ந்த பொதுப் போக்குவரத்தில் ஈடுபடாத எந்தவொரு தனிப்பட்ட வாகனத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்டளவிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படும்.

தேசிய அடையாள அட்டை , கடவுச்சீட்டு இலக்கம், வர்த்தக அல்லது வியாபார பதிவு இலக்கம் என்பவற்றைக் கொண்டு வாகனங்களை பதிவு செய்ய முடியும். ஒரு வாகனத்திற்கு ஒரு கியூ. ஆர். குறியீடு மாத்திரமே வழங்கப்படும்.

தேசிய எரிபொருள் அனுமதி பத்திர முறைமை நடைமுறைக்கு வரும் வரை லங்கா ஐ.ஓ.சி. வழமை போன்று எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்கும் - என்றார். (ஐ)

## மன்னாரில் குடிதண்ணீர் வழங்கல் முன்னறிவிப்பின்றி தடைப்பட்டது!

மன்னார், ஜூலை 17

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் வழங்கப்பட்டு வரும் மன்னார் பிரதேச பாவனையாளர்களுக்கான உள்ளக குடிதண்ணீர் விநியோகம் நேற்று சனிக்கிழமை காலை முதல் எவ்வித முன் அறிவித்தலும் இன்றி தடைப்பட்டுள்ளதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டு வரும் மன்னார் பிரதேச பாவனையாளர்களுக்கான உள்ளக குடிநீர் விநியோகம் எவ்வித தடைகளும் இன்றி 24 மணி நேரம் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

எனினும், நேற்று சனிக்கிழமை காலை முதல் குடிநீர் விநியோகம் எவ்வித முன் அறிவித்தலும் இன்றி தடைபட்டுள்ளது. இதனால் பாவனையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்பு கொண்டு வினவிய போது,

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே குறித்த நீர் விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. உரிய முறையில் எரிபொருள் வழங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். தற்போது எமக்கு தேவையான எரிபொருள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, உடனடியாக மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்பட்டு வரும் மன்னார் பிரதேச பாவனையாளர்களுக்கான உள்ளக குடிநீர் விநியோகம் வழமைக்குத் திரும்பும் எனத் தெரிவித்தனர். (ஐ)

### மொட்டுக்குள் வலுக்கும் முறுகல்:

# சாகர காரியவசத்தின் அறிக்கைக்கு விளக்கம் கேட்டு ஜீ. எல். பீரிஸ் கடிதம்!

கொழும்பு, ஜூலை 17

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்திடம் விளக்கம் கேட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி தெரிவின்போது சிறீ லங்கா பொதுஜன பெரமுன ஆதரவளிப்பதாக நேற்றுமுன்தினம் சாகர காரியவசம் வெளியிட்டிருந்த அறிக்கை தொடர்பிலேயே அவர் இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அதில், 6 கேள்விகளை எழுப்பியுள்ள பீரிஸ், அந்தக் கேள்விகளுக்கு விரைவான பதில்களை சாகர காரியவசம் வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், எந்த அடிப்படையில் இந்த அறிக்கையை விடுத்தீர்கள்?, இந்தத் தீர்மானத்தை எடுக்கும் போது கலந்துகொண்டவர்களின் பெயர்களை குறிப்பிட முடியுமா? சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் யாப்பின் பிரகாரமா இந்த தீர்மானத்தை எடுத்தீர்கள் என்பன உள்ளிட்ட 6 கேள்விகளுக்கு மிக விரைவில் பதில் வழங்குமாறும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சாகர காரியவசத்தை வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் சாகர காரியவசம் பெரமுன கட்சி ரணிலுக்கு ஆதரவளிக்கும் என்று தெரிவித்த நிலையில், பெரமுன கட்சியை சேர்ந்த டலஸ் அழகப்பெரும ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடுவதால் அவருக்கே ஆதரவு என்று அறிவித்திருந்தார். இது அந்தக் கட்சிக்குள் இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் இருப்பதை வெளிப்படுத்தியது.

இந்நிலையில், இந்த விவகாரம் தற்போது அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆலயத்தில் கத்திக்குத்து; காயமடைந்தவர் மரணம்!

அக்கரைப்பற்று, ஜூலை 17

ஆலயத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

அம்பாறை - அக்கரைப்பற்று - பனங்காடு - கண்ணகிபுரத்தை சேர்ந்த குமாரசிங்கம் சிறிதரன் (வயது 27) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த மாதம் 14 ஆம் திகதி குறித்த ஆலயத்தில் வருடாந்த திருவிழாவின்போது இருவரிடையே காவடி தொடர்பான வாக்குவாதம் முற்றியது. இதையடுத்து குறித்த இளைஞரை 17 வயது இளைஞர் கத்தியால் குத்தினார்.

இதில், காயமடைந்தவர் அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் தாக்குதலை நடத்தியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நபர் கடந்த வியாழக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று அறியய வருகின்றது.

இது தொடர்பான அடுத்த கட்ட விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



# வவுனியாவில் மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் அன்பளிப்பு

வவுனியா, ஜூலை 17

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

மாணவர்களுக்குச் சுற்றுச்சூழல் சார்ந்த அறிவைப் புகட்டி அவர்களிடையே சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், மாணவர்களின் பன்முக ஆளுமைத் திறனை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்ற நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாகவே வவுனியா கோயில்குளத்தில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் சோ. சிவநேசன் தலைமையில் கோயில்குளம் விஷ்ணு ஆலய மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் பங்கேற்றிருந்தார்.

சிறப்பு விருந்தினராகச் சிரேஷ்ட ஊடகவியலாளர் வி. தேவராஜ் கலந்துகொண்டிருந்தார். பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்புக் குறித்து உரையாற்றியிருந்தார்.

இந்நிகழ்ச்சியில் கண்ணன் அறநெறிப் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆலய அறங்காவல் குழுவினர்கள் கலந்து கொண்டிருந்தார்கள். மாணவர்கள் அனைவருக்கும் கனடா ரொறன்ரோவின் மனிதநேயக் குரல் அமைப்பின் அனுசரணையுடன் சூழல் விழிப்புணர்வு மேற்கோள்கள் அச்சிடப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. (ஐ)

# எரிவாயு சிலிண்டர் கோரி மன்னார் மக்கள் ஆர்ப்பாட்டம்!

மன்னார், ஜூலை 17

மன்னார், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வங்காலை கிராம மக்கள் நேற்று சனிக்கிழமை காலை சமையல் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சுமார் 900 லிட்ரோ சமையல் எரிவாயு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து மக்களுக்கு வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

எனினும், நேற்று வங்காலை கிராமத்துக்கு விநியோகிக்கப்படாமல் வேறு கிராமங்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிலையில் வங்காலை கிராமத்தில் உள்ள 4 கிராம



அலுவலர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் வங்காலை பிரதான வீதியை மறித்து எரிவாயு சிலிண்டர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மக்களுடன் கலந்துரையாடினர். இதன் போது, தமது கிராமம் சமையல் எரிவாயு வழங்கும் நடவடிக்கைகளில் இருந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாக தெரிவித்து கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் அதிகாரி மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் அறிவித்த நிலையில், எதிர்வரும் புதன்கிழமை சமையல் எரிவாயுவை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். இதைத் தொடர்ந்து மக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளர்களுடன் தனியாக பேசிய பின்பே முடிவு

### சுயாதீனமாக இயங்கும் கட்சிகள் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதை அடுத்து ஏற்பட்ட ஜனாதிபதி பதவிக்காக முன்னிலையாகும் வேட்பாளர்களுடன் தனித் தனியாக கலந்துரையாட எதிர்பார்ப்பதாக ஆளும் கட்சியில் இருந்து விலகி சுயாதீனமான இயங்கும் ஒன்பது கட்சிகளின் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

அந்த கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது, நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை, அரசியல் நிலவரம் என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி தெரிவில் ஆதரவு; இறுதி சமயத்திலேயே முடிவு

கொழும்பு ஜூலை 17

புதிய ஜனாதிபதியாக யாரை தெரிவு செய்வது என்பது தொடர்பில் இறுதி சமயத்திலே தீர்மானம் எடுக்கப்படும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி தெரிவு தொடர்பில் இன்னும் இறுதி தீர்மானம் எட்டப்படவில்லை எனக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு மற்றும் மத்திய செயல்குழு என்பன கூடித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார். (ஐ)

# கந்தக்காடு மோதல் சம்பவம் நீதி அமைச்சரிடம் அறிக்கை!

கொழும்பு, ஜூலை 17

கந்தக்காடு போதைப் பொருள் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் புனர்வாழ்வு பெற்றவர்கள் தப்பியோடியமை தொடர்பான அறிக்கை நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

அந்த அறிக்கை தனக்கு கடந்த வாரம் தனக்கு கிடைத்ததாக அவர் மேலும் கூறினார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கைதி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு இராணுவ மற்றும் விமானப்படையினர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், பிரேத பரிசோதனையின்போது, கூர்மையற்ற ஆயுதங்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் இந்த மரணம் ஏற்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, கைதிகளை மேற்படி சந்தேகநபர்கள் கொடூரமாக தாக்கியதாக சந்தேகிக்கப்படும் மூங்கில் மற்றும் மின்சார வயர் என்பனவும் மையத்தில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், இவை நீதிமன்றில் சாட்சியமாக சமர்ப்பிக்கப்பட்டன.

கடந்த மாதம் 29ஆம் திகதி இடம் சம்பவத்தில் பதுளை - தெமோதர பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவர் மரணித்தார்.

அவரது இளைய சகோதரர் மற்றும் நண்பர்கள் மூலம் சடலம் அடையாளம் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தொடர்ந்து தாய்நாட்டுக்கு நான் சேவையாற்றுவேன்!

## முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய

கொழும்பு, ஜுலை 17

ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததன் பின்னர் தொடர்ந்தும் தாய் நாட்டுக்காக சேவையாற்றுவேன் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாசிக்கப்பட்ட அவரின் இராஜினாமா கடிதத்திலேயே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நேற்று பாராளுமன்றம் கூடிய போது சபாநாயகருக்கு அனுப்பப்பட்ட இராஜினாமா கடிதத்தை பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க வாசித்தார்.

அந்தக் கடிதத்தில், "நான் ஜனாதிபதியாக பதவியேற்ற 3 மாதங்களுக்குள் கோவிட் தொற்று உலகம் முழுவதையும் பாதித்தது. அந்த நேரத்தில் இலங்கையை தொற்றுநோயிலிருந்து பாதுகாக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் குறித்து திருப்தியடைகிறேன்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பொது முடக்கங்களை அமுல்படுத்தியதன் மூலம், நாடு அந்நியச் செலாவணியை இழந்தது. ஏற்கனவே பாதிக்கப்பட்ட பொருளாதாரம் தொடர்ந்து பாதிக்கப்பட்டது. இந்த நிலையற்ற பொருளாதார தன்மைக்கு தீர்வுகாணும் நோக்கில் சர்வ கட்சி அரசாங்கத்தை அமைக்க அனைத்துக் கட்சிகளுக்கும் பாராளுமன்றில் நான் அழைப்பு விடுத்தேன். பிரச்னைகளுக்கு தீர்வுகாண முழுமையாக நான் முயற்சி எடுத்தேன் என்று நம்புகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# டீசல், மண்ணெண்ணெய் பதுக்கியவர் கைதானார்!

முல்லைத்தீவு, ஜுலை 17

முள்ளியவளையில் வீடு ஒன்றில் டீசல் மற்றும் மண்ணெண்ணையைப் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட பெருங்குற்றப்பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய முள்ளியவளை 4ஆம் வட்டாரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றை சோதனை செய்த வேளை, 4 பரல்களில் பதுக்கி வைத்திருந்த 830 லீற்றர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் 30 லீற்றர் என்பன கைப்பற்றப்பட்டன.

இதன்போது ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டு முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

கைதானவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், அவரை எதிர்வரும் 21ஆம் திகதி நீதிமன்றில் முற்படுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)


# இலங்கைக்கு இரண்டாம் கட்டமாக 1000 தொன் அரிசி வழங்கியது சீனா!

கொழும்பு, ஜுலை 17

பாடசாலை சத்துணவு திட்டத்துக்காக, இலங்கைக்கு இரண்டாவது கட்டமாக ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை சீனா வழங்கியுள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு, பாடசாலை மதிய உணவு திட்டத்துக்காக 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை வழங்குவதாக சீனா கூறியிருந்தது.

கடந்த ஜூன் 28 ஆம் திகதி ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு சீனா வழங்கியிருந்த நிலையில் தற்போது ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை வழங்கியுள்ளது. (ஐ)



# ஐஸ் போதைப் பொருளுடன் முல்லைத்தீவில் இருவர் கைது!

முல்லைத்தீவு, ஜுலை 17

முல்லைத்தீவு - கள்ளப்பாட்டில் கடந்த வியாழக்கிழமை ஐஸ் எனப்படும் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, 23 வயதுடைய கள்ளப்பாடு வடக்கை சேர்ந்த ஒருவரும், 20 வயது வெள்ளப்பள்ளம் வடக்கு உடையார்கட்டைச் சேர்ந்த ஒருவரும் கள்ளப்பாடு பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது கள்ளப்பாடு வடக்கைச் சேர்ந்த 23 வயதுடைய நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்னையே ஆதரிப்பார்கள்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 17

புதிய ஜனாதிபதி தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும், அரசாங்கத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயல்படும் கட்சிகளும் எனக்கு முழுமையான ஆதரவை வழங்கும் என்று நம்புகின்றேன். மக்கள் விடுதலை முன்னணியுடனும் பேச்சுக்கள் தொடர்கின்றன."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"பாராளுமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய ஜனாதிபதிக்கான தெரிவில் போட்டியிடவுள்ளேன். இது எனது தனிப்பட்ட முடிவு அல்ல. எனது கட்சியின் ஏகோபித்த தீர்மானத்தின் பிரகாரமே நான் இந்த முடிவை எடுத்துள்ளேன்.

மோசடியாளர்களிடம் மீண்டும் நாட்டைக் கையளிக்க நான் விரும்பவில்லை.

மக்கள் போராட்டம் ராஜபக்ஷக்களை ஓட ஓட விரட்டியடித்துள்ளது. போராட்டக்காரர்கள் ஊழல், மோசடி இல்லாத புதிய ஆட்சியைக் கோரியே நிற்கின்றனர். அவர்களின் கோரிக்கைகளை எடுத்து நோக்கினால் எனக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் இல்லை. எனவே, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் ஏகோபித்த தீர்மானத்தின் பிரகாரம் புதிய ஜனாதிபதிக்கான தெரிவில் நான் போட்டியிடவுள்ளேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும், அரசாங்கத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயல்படும் கட்சிகளும் எனக்கு முழுமையான ஆதரவை வழங்கும் என்று நம்புகின்றேன். மக்கள் விடுதலை முன்னணியுடனும் பேச்சுக்கள் தொடர்கின்றன" - என்றார். (ஐ)

# யாழ்ப்பாணம் மாநகரில் சைக்கிள் திருடியவர் கைது!

## 18 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஜுலை 17

யாழ்ப்பாணம் மாநகர பகுதிகளில் வண்டிகளைத் திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பெருங்குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையில் சந்தேக நபரிடமிருந்து 18 சைக்கிள்கள் முழுமையாகவும் உதிரிப்பாகங்களாகவும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சைக்கிள்களைத் திருடி அவற்றை உதிரிப்பாகங்களாக்கி விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.



சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சைக்கிள்கள் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் வைக்கப்பட்டுள்ளன. உரிமையாளர்கள் அவற்றை அடையாளம் காட்டுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

அண்மைய நாள்களாக யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேசங்களில் சைக்கிள்கள் திருட்டு அதிகரித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எரிவாயு விநியோகத்தால் நுவரெலியாவில் குழப்பம்!

நுவரெலியா, ஜுலை 17

நுவரெலியா நகரில் நேற்று லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தால் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் அனுப்பி வைக்கப்படும் என அறிவிப்பின் பின்னர் இரண்டு நாட்கள் வரிசையில் இருந்தவர்களுக்கும், விற்பனை முகவர்களுக்கும் இடையில் அமைதியின்மை ஏற்பட்டது.

விற்பனை முகவர் கூப்பன் முறையில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும் என அறிவித்ததன் பின்னர் கூப்பன் இன்றி வரிசையில் காத்திருந்தவர்களுக்கும் விற்பனை முகவர்களுக்கும் இடையில் இவ்வாறு அமைதியின்மை ஏற்பட்டது.

எனினும், இதன்போது, நுவரெலியா பொலிஸாரின் தலையீட்டில் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் கடந்த வியாழக்கிழமை வரிசையில் காத்திருந்து இறுதியில் கிடைக்காத 20 நபர்களுக்கும் ஏனையவை கூப்பன் முறையில் விநியோகம் செய்யப்படும் என அறிவித்து பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்க நடவடிக்கை எடுத்தனர். (ஐ)



ஈழநாடு
Eelanadu
17.07.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாடு?

ஜனாதிபதி பதவிக்கான போட்டிக்கு பலரும் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கவுள்ளதாக அறிவித்திருக்கின்றார் - இந்த நிலையில் அந்தக் கட்சியின் தலைவரும் வெளிவிவகார அமைச்சருமான ஜீ. எல். பீரிஸ், பொதுஜன பெரமுனவின் வேட்பாளருக்கே, தமது கட்சி ஆதவளிக்குமெனத் தெரிவித்திருக்கின்றார்.

மறுபுறும், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும போட்டியிடவுள்ளாரென அறிவித்திருக்கின்றார். தங்களுடைய கட்சியின் வேட்பாளரை ஆதரிப்பதாயின், டலஸ் அழகப்பெருமவுக்கே பொதுஜன பெரமுன ஆதவளிக்கும். இது இவ்வாறிருக்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸநாயக்க, சரத்பொன்சேகா ஆகியோரும் போட்டியிடவுள்ளனர்.

நாட்டின் பொருளாதார நிலைமை அதல பாதாளத்தில் இருக்கின்றது. எவர் ஜனாதிபதியானாலும் கூட, இந்த நிலைமையிலிருந்து மீள்வது மிகவும் கடினமானது. ஏனெனில், 54 பில்லியன் கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கின்றது. நாட்டில் ஒரு பில்லியன் அந்நியச் செலாவணிகூட இல்லை. இந்த நிலையில் கொழும்பின் அரசியல் சமநிலை பாரதூரமாக குழம்பியிருக்கின்றது.

இதுவரையில் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை ஸ்தாபிக்க முடியவில்லை. மக்கள் எழுச்சியை சமாளிக்க முடியாமல் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறியிருக்கின்றார். மக்கள் தொடர்ந்தும் ஆவேசத்தின் உச்சத்தில் இருக்கின்றனர். அரசியல்வாதிகளை தாக்குகின்றனர். ஆனால், ஆச்சரியம் - இவ்வாறானதொரு சூழலில்கூட, பதவிக்காக அடிபடுவதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் கைவிடவில்லை. ஒரு சிறியளவுகூட மாற்றங்களைக் காண்பிக்கவில்லை. அவ்வாறாயின் போராட்டக்காரர்கள் சாதித்தது என்ன? நூறு நாட்களுக்கும் மேலாக, பல்லாயிரக்கணக்கானவர்கள் ராஜபக்ஷக்களின் எதேச்சதிகாரத்துக்கு எதிராகப் போராடியிருந்தனர். இதன் மூலம் ராஜபக்ஷக்கள் அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றனர். ஆனாலும் போராட்டக்காரர்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா?

உண்மையில் இன்றைய சூழலில் அதிகாரப் போட்டிகளை ஓரம் கட்டிவிட்டு, மக்களின் நலனை பற்றி மட்டுமே அனைவரும் சிந்திக்க வேண்டும். ஆனால், எவரிடமும் அவ்வாறானதொரு சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறானவர்களை நம்பி எவ்வாறு தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க முடியும்? சிங்கள மக்களின் நலன்கள் தொடர்பிலேயே அக்கறையற்று செயல்படும் இவர்கள், எவ்வாறு தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் கரிசனை காண்பிப்பார்கள்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் தங்களுடைய உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. இது தொடர்பில் தாமதமின்றி அவர்களின் நிலைப்பாட்டை மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும். ஏனெனில், இரகசிய வாக்கெடுப்பாக இருப்பதால், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிலைப்பாட்டை மக்கள் அறிந்து கொள்வது கடினமானது. எனவே, கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் விக்னேஸ்வரனும் தங்களுடைய உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். பின்கதவு அரசியல் செயல்படுகளில் அல்லது தனித்தனியான 'டீல்'களின் மூலம் விடயங்களை கையாளக் கூடாது. தமிழ் அரசுக் கட்சி ஒரு புறமாகவும் பங்காளிக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் பிறிதொரு புறமாகவும் அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபடக்கூடாது.

இப்போதுள்ள நிலையமையின்படி, தமிழ்த் தேசிய கட்சிகள் வாக்கெடுப்பில் பங்குகொள்ளவதைத் தவிர்ப்பதே சிறப்பானது. ஒருவேளை வாக்களிப்பில் பங்குகொள்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய முடியுமென்று, தமிழ்த் தேசிய கட்சிகள் கருதினால், அதனை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மக்களை ஏமாற்றும் அரசியலை முன்னெடுக்கக் கூடாது.

# பதற்றத்தில் கடந்த கொழும்பு!

**க. ஆ. கோகிலவாணி**

ஜனாதிபதி பதவி விலகியதன் பின்னர் பதில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கக்கூடாது என வலியுறுத்தி கொழும்பில் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தால் கொழும்பில் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

கொழும்பு கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்த புதன்கிழமை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். கடந்த சனிக்கிழமை கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை என்பன ஆர்ப்பாட்டக்காரர்களின் வசமானது. இவ்வாறான நிலையிலேயே பிரதமர் அலுவலகமும் ஆர்ப்பாட்டக்காரர்களின் வசமானது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகப் போகிறார் என்று அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படக்கூடாதென வலியுறுத்தி கொழும்பு, வெலிமடை, அக்குரஸ உள்ளிட்ட பல பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட முற்பட்டபோது அவர்கள் மீது நீர்த்தாரை பிரயோகம், கண்ணீர்ப்புகை பிரயோகம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. இதனால் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக புதன்கிழமை பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் அலுவலகத்துக்குள் உள்நுழைய முற்பட்டபோது அதனை தடுப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரை பிரயோகம், கண்ணீர்ப்புகை பிரயோகத்தை மேற்கொண்டனர்.

அலுவலகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பாதுகாப்பு படையினர் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக குவிக்கப்பட்டிருந்தனர். பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலும் அன்று மதியத்தின் பின்னர் பிரதமர் அலுவலகத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் கைப்பற்றினர்.

ஆர்ப்பாட்ட இடத்தில் இரத்த வெள்ளத்தில் ஒருவர் விழுந்து கிடந்ததை அவதானிக்க முடிந்தது. அச்சமயம் ஆர்ப்பாட்ட இடத்துக்கு வருகைதந்த இராணுவத்தின் கவச வாகனத்தை ஆர்ப்பாட்டக்கரர்களில் ஒருசிலர் தாக்குதவதற்கு முயற்சித்தபோது மற்றைய ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனை தாக்க வேண்டாம் என்றும் அது பொதுசொத்து என்று கூறுவதையும் கேட்க முடிந்தது.

மிகவும் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்மீதே கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தின் போது காயமடைந்த 30 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்களில் இரு பெண்களும் அடங்குவர்.

ஜனாதிபதி பதவி விலகிய பின்னர் பதில் ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்கக்கூடாது என்றும் பிரதமர் பதவி விலக வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

அத்துடன், ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்படும்வரை பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் செயல்பட வேண்டும் என்றும் கூடிய விரைவில் தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும் என்பதுடன் தேர்தலுக்கு செல்லும்வரை இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இவ்வாறான நிலையில், மேல்மாகாணத்தில் உடன் அமுலுக்கு வரும் வகையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், நாடு முழுவதும் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்துமாறும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

அத்தோடு, வன்முறையை தூண்டும் வகையில் சட்டம் ஒழுங்கை மீறுவோரை கைது செய்ய படையினர் மற்றும் பொலிஸாருக்கு பிரதமர் உத்தரவு பிறப்பித்தார்.


இவ்வாறான நிலையில் கொழும்பு வானில், மிகவும் தாழ்வாக உலங்குவானுர்திகள் வட்டமிட்டு பறந்துகொண்டிருந்தன. 'கோட்டா கோ கம' பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் மிகவும் தாழ்வாக கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் பாதுகாப்புப் படையின் உலங்குவானுர்தி மூன்று தடவைகள் சுற்றிவந்தது. இது தொடர்பான காணொலிகளும் வெளியாகியிருந்தன.

கோட்டா கோ கம பகுதியிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கோட்டா கோ கம பகுதி ஆர்ப்பாட்டக்காரர்களால் நிரம்பி வழிந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வாறான நிலையில், ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகையில் உள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பதாக வெளியாகும் செய்திகள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்துவதாகவும், இந்தக் கட்டடங்களின் பொறுப்பு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படுவதை உறுதி செய்யுமாறு அங்குள்ள மக்களிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதைத் தொடர்ந்து கைப்பற்றப்பட்ட அரச மாளிகைகள் அனைத்தும் படைத் தரப்பினரிடம் கையளிக்கப்பட்டன. இவ்வாறான நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்தையும் முற்றுகையிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கிடைக்கப் பெற்ற புலனாய்வு தகவலுக்கு அமைவாக பாராளுமன்றத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு உதவியதன் காரணமாக விமானப்படை தளபதி மற்றும் கடற்படை தளபதியின் வீடும் தாக்குதலுக்கு உட்படுத்தப்படலாம் என்று கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவலுக்கு அமைவாக அவர்களது வீடுகளுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# “கோட்டா கோ கம” ஒரு நிரந்தர அரசியல் தீர்வாக...?

**கணபதி சர்வானந்தா**

**பகிர்வு -38**

அரசியல், பொருளாதாரம் போன்ற சகல துறைகளிலும் மாற்றுவழிகளைத் தேடுவதே மாற்றத்துக்கான ஒரே வழி என்று சொல்லப்படுகிறது. அடிப்படையில் எந்த வித மாற்றத்தையு ம் ஏற்படுத்தாது ஆட்களையும், முகங்களையும் மட்டும் மாற்றுவதால் பயன் பெறப் போவதில்லை. மண்ணில் கிருமிகளை வாழ விட்டு பயிர்களை மாற்றிப் பார்ப்பதில் பயனில்லை. கிருமிகள் பயிர்களை நாசம் செய்து கொண்டே இருக்கும் என்பது அனுபவம்.

எனவே காலாகாலமாய் விஷக்கிருமிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தையே முதலில் நாம் பரிகரிக்க வேண்டும். நல்ல விளைச்சலைப் பெறுவதற்கு நல்ல நிலம் வேண்டும். இங்கே நிலம் என்று சொல்லப்பட்டது அடிப்படையைக் குறிப்பதாகும்.

பொதுவாகச் சமூகக் கட்டமைப்பிலேயே மாற்றங்கள் தேவைப்படுகின்றன. அதனையே மக்கள் போராட்டங்கள் சுட்டி நிற்கின்றன. வெளிப்படையாகப் போராடுகின்ற அதே வேளை மறைமுகமாகவும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்கக் கூடிய தாக இருக்கிறது.

வெளிப்படையாகத் தெரிகின்ற போராட்டங்களையும் அதன் ஆழத்தையும் ஆய்ந்தறிந்தால் அவை பல காலமாக மறைமுகமாக நடத்தப்பட்டவையாகக் கண்டறியலாம். எனவே போராட்டங்களின் வேகங்களைக் குறைக்க மாற்றங்கள் மிகவும் அவசியமாகின்றன. அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தாதவரை இப்படிப்பட்ட சூழ்நிலையே தொடரும். குறிப்பாக அரசியல் பரப்பில் தேவைக் கேற்ப முகங்கள் மாறிக் கொண்டே இருக்கும், சிந்தனை மாறாது. அது போன்ற போக்கில் பொருளாதாராத்தில் ஒரு நிந்தரமான தீர்வு கிட்டப்போவதில்லை. ஒரு நல்ல பொருளாதாரச் சீர்திருத்தம் ஏற்படாதவரை நாடு குழம்பிக்கொண்டே இருக்கும். மக்கள் அமைதியற்றே வாழவேண்டிய வர்களாக இருப்பர். அப்போது போராட்டங்கள் பல வழிகளில் மீண்டும் வெளிப்படலாம்.போராட்டமே வாழ்க்கையாகி விடும்.

தற்போது நாம் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடும் மக்களும் மீண்டெழ உடனடியான தீர்வு என்ன வென அறிந்து அதனை நடைமுறைப்படுத்துகின்ற அதே வேளை நிரந்தமான தொன்றைத் தேடவும் வேண்டும் என்பதைக் காலம் உணர்த்தியிருக்கிறது.

ஆனால் தற்போது வெளியாகிக் கொண்டு இருக்கும் செய்திகளின் அடிப்படையில் அரசியல்வாதிகள் ஒரு தற்காலிகத் தீர்வுக்கே தம்மைத் தயார்படுத்திவருவதாகத் தெரிகிறது. மக்கள் அரசியலைச் சரிவரப் புரிந்துகொள்ளாதாவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். மக்கள் பக்க நியாயத்தை முன்னிறுத்தாது தமது எதிர்காலப் பாதுகாப்பில் மட்டும் அக்கறைகொண்டு காய் நகர்த்துபவர்களாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. இது பல சிக்கல்களை ஏற்படுத்தப்போகிறது.

மீண்டும் பதவியைக் கைப்பற்ற முன்னையவர்கள் முனைகிறார்கள். அது பலனளிக்காத பட்சத்தில் தமக்குச் சார்ப்புள்ளவரை, தாம் சொல்வதைச் செய்யக் கூடிய ஒருவரை, தமக்கொரு நிரந்தர பாதுகாப்பை வழங்கக் கூடிய ஒரு அரசியல் ஆளுமையை அரியணையில் ஏற்றுவதற்கான சகல முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அதற்கு அமைவாக அவர்களுக்கு எதிராக இயங்குபவர்களும் மாற்றீடுகளையும் வைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களும் கழுவித் துடைத்த பழைய பாத்திரங்களையே முன்னிலைக்குக் கொண்டு வருவதான முயற்சிகளிலேயே ஈடுபாடு கொண்டிருக்கின்றனர்.

எனவே எமக்குரிய அதாவது மக்களுக்குரிய ஒரு நிரந்தர மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதில் எவருக்கும் அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு மாற்றத்துக்காக இதுவரை போராடி வந்த மக்களின் கோரிக்கைகளை முற்றாக நிறைவேற்றப் போவதான அரசியல் சூழ்நிலை காணப்பட வில்லை.

தற்போதுள்ள பாரளுமன்றப் பிரதிநிதிகள் வழங்கும் ஆதுரவோடு கொண்டு வரப்படும் மாற்றங்களும் போராட்டகாரர்களின் வேண்டு கோளுக்கான தீர்வும் மக்களைத் திருப்திப்படுத்துமா? என்பது சிந்திக்க வேண்டியதே. ஏனெனில் மக்களின் பிரநிதிகளாகவே தாம் போராடுவதாகப் போராட்டகாரர்கள் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

அதே சமயம் இலங்கையில் வாழும் சிறுபான்மை இனத்தவரை முழுமையாக உள்வாங்கிக் கொள்ளாது நடத்தப்படும் மேற்படி போராட்டம் ஒரு நிரந்தர அமைதியைத் தேடிக் கொள்ளுமா? என்பதுதான் ஒரு கேள்வியாக நிமிர்கிறது. கீழ் காணும் இணையச் செய்தி ஒன்றின் தலைப்பை அவ்வாறு கண்டபோது அந்தக் கேள்வி இன்னும் இரட்டிப்பாகியது.

“சிங்கள மக்களுக்கு எப்போதுமே ஓர் அரசர் தேவைப்படுகிறார். தம்மை ஆளவும், தம் நில புலங்களைக் காக்கவும், இத்தீவில் வாழும் மற்றைய இனத்தவரை அடக்கிஒடுக்கி வைக்கவும், சிங்கள பௌத்த மகா சங்கங்களை வளர்க்கவும், தனி சிங்களராச்சியத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும் ஓர் அரசர் தேவைப்படுகிறார்.”

அந்தத் தலைப்பின் கீழ் காணப்பட்ட செய்தியை நான் முழுமையாகப் படித்து முடித்தபோது “கோட்டா கோ கம” போராட்டம் ஒரு நிரந்தரத் தீர்வாக எனக்குத் தெரியவில்லை.

# இந்தவார ராசிபலன் 17.07.2022 - 23.07.2022

**நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சூன்ய**

**ஜூலை 17 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - ஆடி 01**

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

அரசாங்க வழி கோரிக்கைகள் நிறைவேறும். செலவுகள் அதிகரிக்கும். வரவு செலவுகளில் கவனம் தேவை. திட்டமிட்டு செயல்படுவீர்கள். நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வாரத்தின் முதல் இரண்டு நாட்களும் திட்டமிட்ட செயல்கள் நிறைவேறும். வரவேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அதன்பின் செலவுகள் அதிகரிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

உங்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும்.தொழிலில் இருந்த தடைகள் விலகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும்.நீண்ட நாள் முயற்சி வெற்றியாகும். அரசு பணியில் இருப்பவர்களுக்கு கோரிக்கைகள் நிறைவேறும். எதிர்பார்ப்புகள் லாபமாகும். எண்ணியது ஈடேறும்.செயல்களில் இருந்த தடைகள் விலகும். உங்கள் முயற்சிகள் எளிதாக நிறைவேறும்.வருமானம் அதிகரிக்கும். வீடு அல்லது மனை, நகை வாங்கி மகிழ்வீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

செயல்களில் நிதானம் தேவை. அதன் பின் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். அமைதி காப்பது நன்மையாகும். ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும். ஒரு சிலர் நண்பர்கள் உதவியுடன் கூட்டுத் தொழிலில் ஈடுபடுவீர்கள்.வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகும். குடும்பத்தினர் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். புதிய முயற்சி ஒன்று நிறைவேறும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அதன்பின் செயல்களில் கவனம் தேவை. தடைபட்டிருந்த முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். புதிய முயற்சி பலிதமாகும். அமைதி காப்பதும் விழிப்புடன் செயல்படுவதும் நன்மையாகும். உறவினர்கள், நண்பர்களைப் புரிந்து கொண்டு செயல்படுவீர்கள். நெருக்கடிகளை சந்திப்பீர்கள். திட்டமிட்டதை திட்டமிட்டபடி செயல்படுத்தி வெற்றி காண்பீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

நெருக்கடிகள் அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளைத் தொடர்வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். குலதெய்வ வழிபாடு மேற்கொள்வீர்கள். செயல்களில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை ஒத்தி வையுங்கள். நெருக்கடிகள் விலகும் என்றாலும் செலவுகள் அதிகரிக்கும். கவனமுடன் செயல்படுங்கள். யாரிடமும் வீண் விவாதங்கள் வேண்டாம். அதன்பின் தேவைக்கேற்ற வரவு வந்து சேரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

போராடி வெற்றி காண்பீர்கள். உங்கள் செயல்கள் எளிதாக நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசு வழி முயற்சிகளில் ஆதாயம் உண்டாகும். யோசித்து செயல்படுங்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். சந்திராஷ்டமம் தொடங்குவதால் சில சங்கடங்களை அடைவீர்கள்.வாரத்தின் முதல்நாள் சுமாராக சென்றாலும் அதன்பின் உங்கள் செயல்கள் நினைத்தபடி நிறைவேறும்.புதிய முயற்சிகள் எதையும் மேற்கொள்ள வேண்டாம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

நெருக்கடிகளில் இருந்து விடுபடுவீர்கள்.முயற்சிகள் நிறைவேறும். எதிர்பார்த்தவற்றில் நன்மை காண்பீர்கள். தொடர்ந்து நெருக்கடிகளை மட்டுமே சந்தித்து வந்த உங்களுக்கு இந்த வாரம் யோகமான வாரமாகும். உங்கள் செயல்கள் இழுபறியானாலும் அதன்பின் நினைத்தவற்றில் வெற்றி காண்பீர்கள். ஒரு சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு ஏற்படும். தொழிலில் இருந்த தடைகள் விலகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். சில செயல்களை போராடி முடிப்பீர்கள். சுப நிகழ்ச்சிகள் தள்ளிப்போகும். முயற்சிக்கேற்ப லாபம் உண்டாகும். ஒவ்வொரு செயலிலும் கவனம் தேவைப்படும். உங்கள் வாழ்க்கை குறித்த முக்கிய முடிவு ஒன்றை எடுப்பீர்கள். மகிழ்சசியான செயல்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். செயல்களில் நன்மை உண்டாகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

செயல்கள் நன்மையாகும். நீண்டநாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். அரசு வழியிலான செயல்கள் இழுபறியாகும். நிறைவேறாமல் இருந்த முயற்சிகள் நிறைவேறும். நீண்ட நாள் பிரச்சினைகள் முடிவிற்கு வரும். உங்கள் வார்த்தைக்கு மதிப்புண்டாகும். பொன் பொருள் சேர்க்கையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பெரியோர்களின் ஆதரவால் வாழ்க்கை வளமாகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

உங்கள் முயற்சிகளில் இழுபறிகள் ஏற்பட்டாலும் போராடி சாதிப்பீர்கள். வருமானம் அதிகரித்து நிதிநிலை உயரும். ஒரு சிலருக்கு இட மாறுதல், ஊர் மாறுதல் என்று மாற்றம் உண்டாகும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். கடந்த கால அனுபவத்தைக் கொண்டு சிந்தித்து செயல்படுவீர்கள். இழுபறியாக இருந்த முயற்சிகள் வெற்றியாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். உங்கள் மனம் விரும்பியபடி செயல்படுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். அரசு வழியிலான முயற்சிகளில் ஆதாயம் உண்டாகும். பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். வேலைகளில் இருந்த இழுபறி விலகும். எதிர்பாராத லாபங்களால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. வரவு செலவில் எச்சரிக்கை அவசியம்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

வரவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் பலிதமாகும். பிள்ளைகளின் செயல்பாட்டினால் சங்கடப்படுவீர்கள். செயல்களில் குழப்பங்கள் உண்டாகும். கவனமுடன் செயல்பட வேண்டிய வாரமிது. பெற்றோர்கள் வழியில் சில சங்கடங்களை சந்திப்பீர்கள்.எதிர்பார்த்த பணம் வரும். ஒரு சிலருக்கு உடல் நலனில் சங்கடங்கள் தோன்றலாம் என்பதால் கவனம் தேவை. குடும்பத்திற்காக செலவுகள் மேற்கொள்வீர்கள். உங்கள் செயல்களில் நிதானம் உண்டாகும். பிரச்சிகளை சமாளித்து நினைத்ததை சாதிப்பீர்கள்.

## பிசாசு 2 வெளியீடு

"பிசாசு" படத்திற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து மிஷ்கின் இயக்கத்தில் ஆண்ட்ரியா நடித்துள்ள படம் "பிசாசு 2". பூர்ணாவும் முக்கிய டேத்தில் நடித்துள்ளார். விஜய் சேதுபதி சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளார். முதல்பாகம் போன்று இந்த படமும் திரில்லர் பாணியில் தயாராகி உள்ளது.

இந்தப் படம் வருகிற ஒகஸ்ட் 31இல் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



## வணங்கான்...!




நடிகர் சூர்யா தற்போது பாலா இயக்கத்தில் புதிய படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தை சூர்யாவின் 2டி நிறுவனமே தயாரிக்கிறது. தெலுங்கு நடிகை கீர்த்தி ஷெட்டி கதாநாயகியாக நடிக்கிறார். மேலும் மலையாள நடிகை மமிதா பைஜூவும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார் .

இயக்குநர் பாலாவின் பிறந்தநாளை முன்னிட்டு கடந்த 11ஆம் திகதி படத்தின் தலைப்பு வெளியானது. இந்த படத்திற்கு வணங்கான் என பெயரிட்டுள்ளது.



## அவெஞ்சராகவே ஆசை

"ஆடுகளம்" படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் டாப்சி, இந்திய திரையுலகில் மிக முக்கியமான இடத்தை அவர் பெற்றுள்ளார். நாயகன் இல்லாத - நாயகிக்கு மட்டுமே முக்கியத்துமுள்ள படங்களில் மட்டுமே அவர் தற்போது நடித்து வருகிறார். இவர், இந்திய கிரிக்கெட் வீராங்கனையான மிதாலி ராஜின் வாழ்க்கை வரலாற்று படத்தில் நடித்துள்ளார்.

இந்நிலையில், அவெஞ்சர் கதாபாத்திரத்தில் நடிக்க விரும்புகிறார் என்றும், யாராவது இதைப்பற்றி மார்வெலிடம் சொன்னால் அவர்கள் ஏதாவது செய்யக்கூடும் எனத் தனது ஆசையை வெளிப்படுத்தியுள்ளார் டாப்ஸி.

## மாவீரன்



நடிகர் சிவ கார்த்திகேயன் தற்போது தெலுங்கில் இயக்குநர் அனுதீப் இயக்கத்தில் "பிரின்ஸ்" படத்தில் நடித்து வருகிறார். . தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் உருவாகிறது.

இதையடுத்து சிவகார்த்திகேயனின் 22ஆவது படமாக உருவாகும் படத்தை மண்டேலா இயக்குநர் மடோன் அஸ்வின் இயக்கவுள்ளார். இந்தப் படத்தின் பெயர் வெளியாகியுள்ளது. படத்துக்கு "மாவீரன்" என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க அதிரடிப் படமாக உருவாகிறது.

## அருளுடன் மீண்டும் பிரியா!

"டிமான்டி காலனி 2" படத்தில் அருள்நிதியுடன் நடிக்கிறார் பிரியா பவானி சங்கர்.

அஜய் ஞானமுத்து இயக்கத்தில் அருள்நிதி நாயகனாக நடித்த படம் 'டிமான்டி காலனி'. இதில், ரமேஷ் திலக், சனத், எம்.எஸ்.பாஸ்கர், சிங்கம்புலி உட்பட பலர் நடித்திருந்தனர். 2015ஆம் ஆண்டு வெளியான இந்தப் படம் வரவேற்பைப் பெற்றது.

இந்தப் படம் வெளியாகி ஏழு வருடம் ஆன நிலையில், இப்போது இதன் இரண்டாம் பாகம் உருவாகிறது. முதல் படத்துக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அருள்நிதி நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில் பிரியா பவானி சங்கர் நாயகியாக நடிக்கிறார். இருவரும் ஏற்கனவே 'களத்தில் சந்திப்போம்' படத்தில் நடித்திருந்தனர். இப்போது மீண்டும் இணைந்துள்ளனர்.






**திரைப்படம் - கார்கி**
**இயக்கம் - கௌதம் ராமச்சந்திரன்**
**இசை - கோவிந்த் வசந்தா**
**நடிப்பு - சாய் பல்லவி, காளி வெங்கட்**

திரையுலகம் என்பது வெற்றி பெற்றவர்களுக்கான ஊடகம் மட்டுமல்ல, வித்தியாசமாக யோசிப்பவர்களுக்கும், வளருபவர்களுக்குமானது என்பதை சில படங்கள்தான் நிரூபிக்கின்றன. அப்படி ஒரு படம் தான் இந்த "கார்கி".

100 ஆண்டு கால தமிழ் திரையுலகில் இப்படி ஒரு உச்சக்கட்ட காட்சி இதுவரை வந்ததில்லை என இந்தப் படத்தின் உச்சக்காட்சி அமைந்திருக்கிறது. படம் பார்க்கும் போது உச்சக்கட்டம் இப்படித்தான் போகும் என யாராலும் நிச்சயம் ஊகிக்க முடியாததாக உள்ளது.

சாய் பல்லவி ஒரு தனியார் பாடசாலையில் ஆசிரியை. பத்து வயதில் ஒரு தங்கை. அப்பா ஆர்.எஸ். சிவாஜி குடியிருப்பு தொகுதி ஒன்றின் காவலாளி. அம்மா வீட்டில் மாவு அரைத்து விற்கும் ஒரு குடும்பத் தலைவி.

ஒரு நாள் அப்பா சிவாஜி வேலை பார்க்கும் குடியிருப்பு தொகுதியில் சிறுமியை வன்புணர்ந்த குற்றத்திற்காக நான்கு வட இந்தியர்கள் கைதாகிறார்கள். அவர்களுடன் சேர்த்து சாய் பல்லவியின் அப்பா சிவாஜியும் ஐந்தாவது குற்றவாளி என கைது செய்கிறது காவல் துறை. தன் அப்பா நிரபராதி என நிரூபிக்க சட்டப் போராட்டத்தை ஆரம்பிக்கிறார் சாய் பல்லவி. அவருக்குத் துணையாக வழக்கறிஞர் காளி வெங்கட் கை கொடுக்கிறார். இருவரும் சேர்ந்து குற்றம் சாட்டப்பட்ட சிவாஜியை விடுவித்தார்களா, அதற்கு அவர்களுக்குத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்தனவா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.



கார்கி என்ற படத்தின் பெயரின் கதாபாத்திரத்தில் சாய் பல்லவி. நம் வீட்டில் ஒரு பெண் எப்படி இருப்பாரோ அப்படியான ஒரு கதாபாத்திரம். இந்தக் காலத்தில் எதையும் எதிர்த்து நிற்கும், போராடும் குணம் ஒரு பெண்ணுக்குத் தேவை என்பதை இவரது கதாபாத்திரம் எடுத்துக் காட்டுகிறது. சாய் பல்லவிக்கு தமிழ் திரையுலகு இன்னும் சரியான கதாபாத்திரங்களை, படங்களைக் கொடுக்கவில்லை என அவர் நடித்த சில தெலுங்குப் படங்களைப் பார்க்கும் போது தோன்றும். அந்தக் குறையை இந்த "கார்கி" படமும், கதாபாத்திரமும் போக்கியிருக்கிறது.

படம் முழுவதையும் ஒற்றை ஆளாகத் தாங்கி நிற்கிறார். சின்னச் சின்ன முகபாவனைகளைக்கூட இவ்வளவு நுணுக்கமாகச் செய்ய முடியுமா என வியக்க வைக்கிறார். இந்த ஆண்டின் சிறந்த நடிகைகக்கான பல விருதுகள் சாய் பல்லவிக்குக் காத்திருக்கிறது.

காளி வெங்கட், தமிழ்த் திரை இன்னும் சரியாக பயன்படுத்திக் கொள்ளாத ஒரு நடிகர். அவரின் பேச்சும், நடிப்பும் எந்தக் கதாபாத்திரத்திலும் அவ்வளவு யதார்த்தமாக இருக்கும். அதை உன்னிப்பாகக் கவனித்து இந்தப் படத்தில் வழக்கறிஞர் கதாபாத்திரம் கொடுத்து அவருக்கு பெருமை சேர்த்திருக்கிறார் இயக்குநர். அந்த நம்பிக்கையைத் துளி கூட பொய்யாக்காமல் "இந்திரன்ஸ் கலியபெருமாள்" என்ற வழக்கறிஞர் கதாபாத்திரத்தில் வெளுத்து வாங்கியிருக்கிறார்.

சாய் பல்லவியின் அப்பாவாக ஆர். எஸ் சிவாஜி, பாதிக்கப்பட்ட சிறுமியின் அப்பாவாக சரவணன், நீதிபதியாக திருநங்கை சுதா, வழக்கறிஞராக ஜெயப்பிரகாஷ் என ஒவ்வொருவரும் அவரவர் கதாபாத்திரங்களில் அவ்வளவு நிறைவாய் நடித்திருக்கிறார்கள்.

கோவிந்த் வசந்தா பின்னணி இசை ஒவ்வொரு காட்சியிலுமே உயிர்ப்புடன் இருக்கிறது. இம்மாதிரியான படங்களுக்கு பின்னணி இசை மிக முக்கியம். "96" படத்துக்குப் பிறகு கோவிந்த் வசந்தாவுக்கு பெயர் சொல்லும் ஒரு படம். ஸ்ரையந்தி, பிரேம்கிருஷ்ணா அக்காடு இருவரின் ஒளிப்பதிவும் நம்மையும் படத்திற்குள் கூடவே பயணிக்க வைக்கும் ஒரு உணர்வைத் தருகிறது.

இடைவேளைக்குப் பின் திரைக்கதை கொஞ்சம் தடுமாறுகிறது. சாய் பல்லவிக்கும் சிறுமியாக இருந்த போது பாலியல் சீண்டல் இருந்தது என்பதை அடிக்கடி காட்டுகிறார்கள். அது படத்துக்கு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அந்த பின்கதையில் ஒரு குறிப்பிட்ட காட்சியை நீக்கியிருந்தால் உதவியாக இருந்திருக்கும்.

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என கவிமணி சொன்னார். ஆனால், இங்கு மங்கையரை சிறுமிகளாக இருந்தாலும் விட்டு வைக்காமல் அவர்கள் மீதான பாலியல் குற்றங்கள் அவ்வப்போது நடந்து வருகிறது. பெண்கள், புதுமைப் பெண்களாய் மாற வேண்டும் என்று கடந்த பல வருடங்களாகவே சொல்லி வருகிறார்கள். ஒரு சிலர் அப்படி மாறினாலும் இந்த ஆணாதிக்கம் நிறைந்த ஊரும், உலகமும் அவர்களை அடக்கி விடுகிறது.

ஒரு சிறுமிக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காக, இந்த ஊர், ஊடகம், அதிகாரிகள் என யார் எதிர்த்து நின்றாலும் நியாயத்துக்காக ஒரு புதுமைப் பெண் எப்படிப் போராடுவாள் என்பதுதான் இந்த "கார்கி". ஒவ்வொரு பெண்ணும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய படம்.

# இலங்கை அரசியல் பரப்பை பேரளவில் மாற்றிவிட்ட 100 நாட்கள்



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



**கொ**ழும்பு காலிமுகத்திடல் ஜனாதிபதி செயலக முற்றுகை மக்கள் கிளர்ச்சி இன்று 100 நாட்களை நிறைவு செய்கிறது. இந்த 100 நாட்களிலும் நடந்தேறியவை சகலதும் இலங்கைக்கு புதியவை.

நான்கு மாதங்களுக்கு முன்னர் பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட நிவாரணம் கேட்டு வீதியில் இறங்கி மக்கள் செய்யத்தொடங்கிய ஆர்ப்பாட்டங்கள் நாளடைவில் முக்கியமான அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கும் கிளர்ச்சியாக மாறி அரசியல் புரட்சியொன்றின் பரிமாணங்களை எடுத்தது. அதன் உலகறிந்த சின்னமாக காலிமுகத்திடல் “கோட்டா கோ கம” கிராமம் விளங்குகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அரசாங்கமும் பதவி விலகவேண்டும், ராஜபக்சாக்கள் அரசியலில் இருந்து வெளியேறவேண்டும், புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டு முறைமை மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற பிரதான கோரிக்கைகளை வலியுறுத்திய மக்கள் கிளர்ச்சி அதன் முதல் இலக்குகளை படிப்படியாக அடைந்து 92 வது ( ஜூலை 9) தினத்தில் மிக முக்கியமான வெற்றியைச் சாதித்ததை காணக்கூடியதாக இருந்தது.

ஜூலை 9 எரிபொருள் தட்டுப்பாட்டின் விளைவான போக்குவரத்து நெருக்கடிக்கு மத்தியிலும் நாட்டின் நாலா பகுதிகளில் இருந்தும் கொழும்பில் திரண்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றி இலங்கை வரலாறு காணாத “ நாடக பாணி நிகழ்வை” அரங்கேற்றினார்கள். அடுத்து ஜனாதிபதி செயலகமும் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையும் பிரதமரின் அலுவலகமும் கூட மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டன.

முன்கூட்டியே ஜனாதிபதி தனது பரிவாரங்களுடன் மாளிகையில் இருந்துவெளியேறிவிட்டார். தேசிய பாதுகாப்பை பிரதான சுலோகமாக முன்வைத்து ஆட்சியதிகாரத்துக்கு வந்த ஒரு ஜனாதிபதி தனக்கே பாதுகாப்பில்லாத நிலையில் எங்கோ மறைந்திருந்து பின்னர் நாட்டை விட்டு தப்பியோட வேண்டியேற்பட்டது.

ஒரு தசாப்த காலத்துக்கு முன்னர் அரபுநாடுகளின் சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி “அரபு வசந்தம்” என்று அழைக்கப்படுகிறது. அந்த வசந்தத்தை எல்லாம் புரட்டிப்போடுகின்ற வகையில் இலங்கை மக்கள் தங்களுக்கென்று தனியான வசந்தத்தை முன்னெடுத்தார்கள். எமது தெற்காசிய பிராந்தியத்தில் இது போன்று -- அரசியல் அதிகார வர்க்கத்தை உலுக்கிய மாபெரும் மக்கள் கிளர்ச்சி வேறு எங்கும் இடம்பெற்றதில்லை..

மக்கள் கிளர்ச்சியினால் அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்ட இலங்கையின் முதல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, பதவிக்காலத்தின் இடைநடுவில் பதவி விலகிய ஜனாதிபதி, நாட்டை விட்டு தப்பியோடிய முதல் ஜனாதிபதி என்றெல்லாம் கோட்டாபய வரலாற்றில் பதிவாகப்போகிறார். தோல்வி கண்ட ஜனாதிபதியாக பதவியில் இருந்து



விலக விரும்பவில்லை என்று கூறியவர் அதை விடவும் கேவலமான அவமதிப்புடன் விரட்டப்பட்டு தஞ்சம் அடைவதற்கு நாடுகளை தேடிக் கொண்டிருக்கும் பரிதாபநிலை.

ராஜபக்சாக்களில் எவருமே இன்று ஆட்சியதிகார பதவிகளில் இல்லை. மக்கள் கிளர்ச்சியின் நெருக்குதல் காரணமாக ஏப்ரில் 4 அமைச்சரவை பதவி விலகியபோது அமைச்சர்களாக இருந்த ராஜபக்சாக்கள் சகலரும் பதவிகளை இழந்தனர். மே 9 அலரிமாளிகையில் இருந்து தனது ஆதரவாளர்களையும் குண்டர்களையும் கட்டவிழ்த்துவிட்டு கோட்டா கோ கம அமைதிவழி போராட்டக்காரர்கள் மீது தாக்குதலை நடத்திய மகிந்த ராஜபக்ச, அதற்கு எதிர் வினையாக அன்றைய தினம் நாட் டின் பல பகுதிகளிலும் மூண்ட மோசமான வன்முறைகளுக்கு மத்தியில் பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.

ஜூன் 9 நாட்டின் இன்றைய பொரு ளாதார நெருக்கடியின் சூத்திரதாரிகளில் ஒருவரான முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். ஜூலை 9 கோட்டாபய பதவி விலகாமலேயே நாட்டை விட்டு தப்பியோடி இறுதியில் சிங்கப்பூரில் இருந்துகொண்டு பாராளுமன்ற சபாநாயகருக்கு தனது பதவிவிலகல் கடிதத்தை அனுப்பி வைத்தார். அவர் இலங்கையிலேயே தொடர்ந்து இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தால் பதவியைத் துறந்திருக்கமாட்டார். தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக அவர் அச்சம் கொண்டிருந்தார் என்று மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற சபாநாயகருமான முஹமட் நஷீட் கூறியிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

கொழும்பில் இருந்து வெளியேறி மாலைதீவைச் சென்றடைந்த பின்னர் கோட்டாபய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமித்தார். அவரின் பதவி விலகல் கடிதம் உறுதிப்படுத்தப்பட்டு சபாநாயகர் முறைப்படியாக அது குறித்து நாட்டுக்கு அறிவித்த பின்னர் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக வெள்ளியன்று பதவியேற்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இலங்கையின் வரலாற்றில் அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதியொருவர் பதவி விலகியதையடுத்து அந்த பதவி காலியாகியிருப்பது இதுவே முதற்தடவையாகும். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 1993 மேதினத்தன்று கொழும்பில் தற்கொலைக்குண்டு தாக்குதலில் கொல்லப்பட்டபோது பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்க அன்றைய தினமே ஜனாதிபதியாக பதவியேற்றார். 7 நாட்களுக்குள் கூடிய பாராளுமன்றம் அவரது பதவியை ஏகமனதாக அங்கீகரித்தது. ஜனாதிபதி பதவிக்கு ஆசைப்பட்ட பலர் அன்று இருந்தபோதிலும், பிரேமதாச கொலையை அடுத்த நெருக்கடியான சூழ்நிலையில் எவரும் அந்த பதவிக்கு போட்டியிட்டு பாராளுமன்றத்தில் ஒரு தேர்தலுக்கு வழிவகுக்க விரும்பவில்லை.

ஆனால், இத்தடவை பாராளுமன்றம் புதிய ஜனாதிபதியொருவரை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யவிருக்கிறது. எதிர்வரும் புதன்கிழமை (ஜூலை 20 ) தேர்தல் நடைபெறும் என்று பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதுவரைக்கும் காத்திராமல் சாத்தியமானளவு விரைவாக புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்யுமாறு சில சிவில் சமூக அமைப்புகள் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தன.



(09 ஆம் பக்கம் பார்க்க...)

ஈழநாடு



# இலங்கை அரசியல் பரப்பை...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருந்த தருணம் வரை தேர்தல் திகதி குறித்து மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை.

புதிதாக தெரிவுசெய்யப்படக்கூடிய ஜனாதிபதி இலங்கையில் பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்படுகின்ற முதல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருப்பார். இந்த தேர்தல் மக்கள் கிளர்ச்சியின் விளைவாக நாட்டின் அரசியல் அகல்பரப்பில் ஏற்பட்டிருக்கும் பேரளவிலான மாற்றத்துக்கு மத்தியில் இடம்பெறவிருக்கிறது.



தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் வீட்டுக்குப் போகவேண்டும் என்று கேட்கும் மக்கள் கிளர்ச்சி (அறகலய)போராட்டக்காரர்கள் தெரிவுசெய்யப்படவிருக்கின்ற ஜனாதிபதி தொடர்பில் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகிறார்கள் என்பது அடுத்து வரும் நிகழ்வுப்போக்குகளை தீர்மானிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை மாத்திரமல்ல, பிரதமர் விக்கிரமசிங்கவையும் பதவி விலகவேண்டும் என்றே போராட்டக்காரர்கள் வலியுறுத்திக்கொண்டிருந்தார்கள். அவர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கூட அவர் விலகவேண்டும் என்ற கோரிக்கை தணியவில்லை. அவரும் அரசியலமைப்பை மீறுகின்ற எந்தச் செயலையும் அனுமதிக்கப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்.



பதில் ஜனாதிபதி என்ற முறையில் நாட்டு மக்களுக்கு முதல் முறையாக உரையாற்றிய விக்கிரமசிங்க ஜனாதிபதியின் அதிகாரங்களை கணிசமானளவுக்கு குறைத்த 19 வது அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக மீண்டும் கொண்டுவருவதாக உறுதியளித்திருக்கிறார்.

அத்துடன் ஜனாதிபதிக்கு என்று தனியான கொடி தேவையில்லை, தேசியக்கொடியே போதுமானது, ஜனாதிபதியை இனிமேல் "அதிமேதகு" என்று விளிக்கத்தேவையில்லை என்று விக்கிரமசிங்க அறிவித்தததையும் காணக்கூடியதாக இருந்தது. அரசியல் வர்க்கத்தை நாட்டு மக்கள் எந்தளவுக்கு அவமதிப்பாக நோக்குகிறார்கள் என்ற புரிதல் அவருக்கு ஏற்பட்டிருப்பதை இது வெளிக்காட்டுகிறது.

இதுவரையில் வெளியாகியிருக்கும் தகவல்களின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் மும்முனைப் போட்டியாக அமையும் என்றே தெரிகிறது. பதில் ஜனாதிபதி விக்கிரமசிங்க, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மூத்த தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரே போட்டியிடவிருப்பதாக கூறப்படுகிறது.

117 உறுப்பினர்களைக் கொண்ட பொதுஜன பெரமுன பாராளுமன்றக்குழு விக்கிரமசிங்கவை ஆதரிக்கத் தீர்மானித்திருப்பதாக அந்த கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவாசம் வெள்ளியன்று அறிவித்தார். இரகசிய வாக்கெடுப்பு என்பதால் இன்றைய அரசியற் குழப்பம் நிறைந்த சூழ்நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கிடையில் வாக்குகள் எவ்வாறு பிரிவடையும் என்பதை முன்னுணர்ந்து கொள்வது மிகவும் கஷ்டமானதாகும்.

எது எவ்வாறிருந்தாலும், புதிய ஜனாதிபதி இதுகாலவரையில் எந்தவொரு இலங்கை ஜனாதிபதியும் எதிர்நோக்கியிராத பாரதூரமான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவராக இருக்கப்போகிறார். முன்னையவர்களைப் போலன்றி மக்களின் எதிர்பார்ப்புகளைப் பற்றி ஒவ்வொரு கணமும் சிந்தித்து தனது அணுகுமுறைகளையும் செயற்பாடுகளையும் தீர்மானிக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படும்.

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை மாத்திரமல்ல, பிரதமர் விக்கி ரமசிங்கவையும் பதவி விலகவேண்டும் என்றே போராட்டக் காரர்கள் வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். அவர் பதில் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கூட அவர் விலகவேண்டும் என்ற கோரிக்கை தணியவில்லை. அவரும் அரசியலமைப்பை மீறுகின்ற எந்தச் செயலையும் அனுமதிக்கப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறார்.**

பழைய மாதிரி அரசியல் செய்வதற்கு இடமளிக்கக்கூடியதாக தற்போதைய சூழ்நிலை இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். புதிய ஆட்சியாளர்கள் எவராயினும் அரசியல் விழிப்புணர்வும் எச்சரிக்கையும் கொண்ட குடிமக்களின் உன்னிப்பான அவதானிப்பின் கீழேயே செயற்படவேண்டியிருக்கும். சுருக்கமாக சொல்வதானால் ராஜபக்சாக்களின் வீழ்ச்சிக்கு பின்னரான இலங்கையில் வழமையான அரசியலுக்கு இடமிருக்கப்போவதில்லை. எந்த நேரத்திலும் மக்கள் சக்தி வீதிகளில் இறங்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.




கடந்த நான்கு மாதங்களும் இலங்கை மக்களை பெருமளவுக்கு பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு கூருணர்வு கொண்டவர்களாக அரசியல்மயப்படுத்தியிருக்கிறது. தேர்தல்களில் அளிக்கும் வாக்குறுதிகளை வெற்றிபெற்ற பிறகு காற்றில் பறக்கவிடும் அரசியல் கலாசாரத்துக்கு இனிமேல் போதுமான வாய்ப்புகள் இருக்காது. மக்கள் சக்தி அரசியல்வாதிகள் மத்தியில் கடுமையான பீதியை ஏற்படுத்தியிருக்கிறது. அடுத்த தேர்தலில் இன்றைய பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் போட்டியிட முன்வருவார்களோ தெரியவில்லை.

சில அரசியல் அவதானிகளின் அபிப்பிராயப்படி பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் விக்கிர மசிங்க ஜனாதிபதி தேர்தலில் பெற்றி பெறக்கூடிய வாய்ப்பு பலமாக இருக்கிறது. தவிர்க்கமுடியாத வகையில் அவர் ராஜபக்சாக்களின் நலன்களைப் பாதுகாப்பவராக அடையாளப்படுத்தப்பட்டு நிற்கிறார். அதனால் அவர் தெரிவாகும் பட்சத்தில் "அறகலய" வின் இரண்டாம் கட்டம் தொடங்குவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் சில அவதானிகள் கூறுகிறார்கள்.

கோட்டாபயவை பதவியில் இருந்துவிரட்டும் வரை காலிமுகத்திடலை விட்டுப் போகமாட்டோம் என்று சூளுரைத்த போராட்டக்காரர்கள் அவர் நாட்டை விட்டு தப்பியோடிய பின்னரும் அங்கே தொடர்ந்து முகாமிட்டிருக்கிறார்கள். ஜனாதிபதி தெரிவின் பின்னர் அவர்கள் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பார்கள் எனபது முக்கியமான ஒரு கேள்வி. விக்கிரமசிங்க தெரிந்தெடுக்கப்படுவாரேயானால் அவரது அரசாங்கம் ராஜபக்சாக்களின் ஆட்சியின் தொடர்ச்சியாகவே இருக்கும் என்று போராட்டக்காரர்கள் மத்தியில் பரவலாக அபிப்பிராயம் இருக்கிறது.

இத்தகையதொரு பின்புலத்தில், இலங்கையின் முன்னணி அரசியல் ஆய்வாளர்களில் ஒருவரான பேராசிரியர் ஜயதேவ உயன்கொட கடந்த வெள்ளிக்கிழமை இந்தியாவின் முக்கியமான ஆங்கில தினசரிகளில் ஒன்றான "த இந்து" வில் எழுதிய கட்டுரையொன்றின் முடிவில் தெரிவித்த கருத்தை நோக்குவது பொருத்தமானதாக இருக்கும்.

"விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவானால் வேறுபட்ட பெயரில் ராஜபக்சாக்களின் ஆட்சியே தொடரும் என்று கருதப்படக்கூடிய சூழ்நிலையில் புதிய அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி மூளக்கூடிய சாத்தியம் இருக்கிறது. இரண்டு அதிகார மையங்களுக்கு இடையிலான மோதலாக அது உருவெடுக்கலாம். அதாவது பாராளுமன்றமும் ஜனாதிபதியும் ஒரு மையம், கொழும்பு காலிமுகத்திடலை தளமாகக்கொண்ட மக்கள் கிளர்ச்சி மற்றைய அதிகார மையம்.

"இந்த புதிய கட்ட மோதல் அரசியல் அதிகாரம் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு தீர்வுகாண்பதை நோக்கி பெரும்பாலும் திருப்பப்படலாம். அரசியல் அதிகாரம் என்பது எல்லா வேளைகளிலும் சமாதான வழிமுறைகளின் மூலமாக தீர்க்கப்பட்டுவந்த ஒரு பிரச்சினையல்ல என்பதை வரலாறு கூறுகிறது".

# ஓடுமீன் ஓடும்வரை காத்திருந்த ரணில்

## நாடு நாடாக ஓடித்திரியும் கோட்டாபய தள்ளாடும் ச(ர்)வகட்சிகளின் தலைகள்!

**பனங்காட்டான்**

**ராஜபக்சக்கள் ஒவ்வொருவராக அரசியல் ஆடுகளத்திலிருந்து அகற்றப்பட்டு வருகின்றனர். கோட்டாபய நாடு நாடாக நாடோடியாக ஓடிக்கொண்டிருக்கிறார். ஆனாலும் அவரே ஜனாதிபதி. தனக்கான காலம்வரை காத்திருந்த ரணில் அந்தக் கதிரையில் ஏறிவிட்டார். அந்தக் கதிரையை தட்டிப் பறிக்க அரசியல் கட்சிகள் தங்களுக்குள் போட்டி. கேடுகெட்ட சிங்களதேச அரசியலால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.**



**வி**தி சுழி மாறினால் பிரளயம் ஏற்படும் என்பர். இலங்கையில் இப்போது இடம்பெறுவது அதனிலும் மேலானது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் எத்தனையோ அதிகாரப் போட்டிகள், சதி முயற்சிகள், ஆட்சி கவிழ்ப்பு எத்தனங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால், இப்போது போன்ற அவலமான, கேவலமானவை இடம்பெறவில்லை.

இலங்கையின் முதலாவது அரசியற் படுகொலை பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கவில் ஆரம்பமானது. இக்கொலையைப் புரிந்து மரண தண்டனை பெற்றவர் ஒரு பௌத்த பிக்கு. தாங்கள் அரியாசனத்தில் ஏற்றிய தலைவரை அவர்களே சுட்டுக் கொன்றனர்.

சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராக வந்தபோது படைத்துறையினர் சிலர் ஆட்சிக் கவிழ்ப்புக்குச் சதி செய்து அகப்பட்டுக் கொண்டது இன்னொரு வரலாறு.

1971 ஏப்ரலில் சிறிமாவோ ஆட்சியைக் கவிழ்த்து புதுயுகம் படைக்கப் புறப்பட்ட ரோஹண விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி. அடி சறுக்கிய கதை மற்றொரு வரலாறு. இச்சம்பவத்தில் இருபதாயிரத்துக்கும் அதிகமான சிங்கள இளைஞர்களின் உயிர் பறிக்கப்பட்டதும், இந்தியா இதில் உடனிருந்து பங்காற்றியதும் மறக்க முடியாத வரலாறு.

ஆனால், இப்போதைய அரசியல் நிகழ்வுகள் சிங்களதேச அரசுக்கு சிங்கள மக்கள் புகட்டிவரும் நவீன பாடவியலாக அமைந்துள்ளது.

ஜே.வி.பி.யின் சேகுவேரா புரட்சி இடம்பெற்ற 1971 ஏப்ரல் மாதத்தில் இலங்கை ராணுவத்தில் இணைந்த கோட்டாபய, படிப்படியாக உயர்வு பெற்று அதிலிருந்து ஓய்வு பெற்று, அமெரிக்கா சென்று அந்நாட்டு பிரஜாவுரிமை பெற்று குடும்பத்துடன் (மனைவி, மகன்) வாழ்ந்தவர்.

2000ம் ஆண்டில் தமையனார் மகிந்த ஜனாதிபதியானதும் நாடு திரும்பி பாதுகாப்புத்துறைச் செயலாளராக நியமனம் பெற்று, தமிழர் தாயகத்தில் மனித குலத்துக்கு எதிராக இனப் படுகொலைகளை மேற்கொண்டு நயவஞ்சக முறையில் வெற்றி வீரனாக அடையாளப் படுத்தப்பட்டவர். இதனால், சிங்கள மக்கள் இவரை யுத்த நாயகர் என போற்றித் துதித்தனர்.

இந்த அறிமுகம் 2019 நவம்பர் 16ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இவருக்கு சிங்கள வாக்குகளை அள்ளிக் கொட்டியது. 69 லட்சம் சிங்கள மக்களின் வாக்குகளால் தெரிவானவர் எனும் மமதையுடன் எப்போதும் பவனி வந்த இவர், அந்த சிங்கள மக்களைக் காப்பாற்றுவதே தமது தலையாய கடமை எனவும் விளாசி வந்தவர்.

கடந்த மார்ச் மாதம் 31ம் திகதி இவரது மிரிகான வீட்டின் முன்னால் திரண்ட இவரது மக்கள் கோதா கோ ஹோம் (கோட்டா வீட்டுக்குப் போ) என முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். அன்றுதான் இவரைத் தொட்டது கெடுகாலம். ஆனாலும் தமது இருப்பை மேலும் ஸ்திரப்படுத்த சில பல நடவடிக்கைகளை இவர் மேற்கொண்டார்.

தம்மைத் தவிர மற்றைய அனைத்து ராஜபக்சக்களையும் அமைச்சர் பதவியிலிருந்து நீங்குமாறு பணித்து (இது நீக்கப்படல் தான்) முதற்கட்டத்தை தாண்டினார். இது அவருடைய ராணுவ சிந்தனையின் வயப்பாடு. இவரின் அண்ணன்மார் சமல், மகிந்த, தம்பி பசில், பெறா மக்கள் நாமல், சசீந்திர ஆகியோர் விருப்பமின்றியே அமைச்சர் பதவிகளைத் துறந்தனர். இறுதியில் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியை பசில் பறிகொடுத்தார்.

இது எதுவுமே கோட்டாவுக்கு எதிரான மக்கள் எழுச்சியை நிறுத்தவில்லை. மாறாக, மேலும் நீட்சி பெறவே செய்தது. இதிலிருந்து தப்புவதற்கு - ஏற்கனவே தோற்றுப் போய் தேசியப் பட்டியலூடாக எம்.பியாக வந்த ரணிலைப் பிரதமராக்கி, அவரின் நிழலுக்குள் தம்மை மறைக்க எடுத்த முயற்சியும் இவருக்குக் கைகொடுக்கவில்லை.

நான் மீண்டும் தேர்தலில் போட்டியிட மாட்டேன். எனவே இந்தப் பதவிக் காலம் முடியும்வரை என்னை இருக்க விடுங்கள் என்று அழாக்குறையாக போராட்டக்காரரிடம் கெஞ்சிப் பார்த்தார். அதற்கு எவரும் செவி சாய்க்கவில்லை.

தோற்றுப்போன ஜனாதிபதியாக என்னால் விலக முடியாது, எனக்கு வாக்களித்த 69 லட்சம் மக்கள் இன்னமும் என் பக்கமே இருக்கிறார்கள் என்றும் சொல்லிப் பார்த்தார். அதுவும் எடுபடவில்லை. சாம பேத தான தண்டம் அமைத்தும் செயலற்றுப் போயின. ராஜபக்ச ஊழல் தோட்டத்தில் எஞ்சியிருந்த ஒற்றை மரமாக கோட்டா தடுமாற ஆரம்பித்தார்.

மே 9ம் திகதி பிரதமர் பதவியை மகிந்த துறந்தார். யூன் 9ம் திகதி பசில் தனது எம்.பி. பதவியை துறந்தார். யூலை 9ம் திகதி கோட்டாவின் நாள். இந் நாளில் தான் இவரது கண்டச் சனி ஆரம்பமாகியிருக்க வேண்டும். இவரது செயலகம், அலரி மாளிகை மட்டுமன்றி, 200



ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய சாம்ராஜ்யத்தால் கட்டப்பட்ட ராணி இல்லம் (இப்போது இது ஜனாதிபதி மாளிகை) போராட்டக்காரர்களால் சுற்றி வளைக்கப்பட்டது. இதனை எதிர்பார்த்த கோட்டா அதற்குச் சில மணித்தியாலங்களுக்கு முன்னர் பாதுகாப்பாக வெளியேறிவிட்டார்.

முதலில் ராணுவத்தின் பாதுகாப்பு - பின்னர் கடற்படையின் பாதுகாப்பு - இறுதியில் விமானப்படையின் பாதுகாப்புடன் தமது மனைவி அயோமாவையும் இணைத்துக் கொண்டு மாலை தீவுக்கு தப்பியோடும் நிலை உருவாகியது. முள்ளிவாய்க்காலை வெற்றிகொள்ள மேற்கொண்ட இனப்படுகொலையை சிங்கள தேசத்தில் இவரால் செய்ய முடியாமல் போய்விட்டது.

அஸ்கிரிய பீடம், மல்வத்துவ பீடம், அமரபுர நிக்கய, ராமண்ணான நிக்கய ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்த மகா சங்க பிரகடனம் காலிமுக கோட்டா கோ கமவுக்கு ஆதரவாக மாறியதும், தமது சகோதரர்களை எதிரிகளாக்கியதும் கோட்டாவை தனிமைப்படுத்தியது எனலாம்.

தமக்கு மூக்குப் போனாலும் எதிரிகளுக்கு (விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாச, சரத் பொன்சேக) சகுனப் பிழையாக இருக்க வேண்டுமென்பதற்காக விரும்பியோ விரும்பாமலோ ரணிலை தொடர்ந்து பிரதமராக வைத்திருக்க வேண்டிய நிலை கோட்டாவுக்கு மேலும் அவசியமானது.

சர்வதேசத்துக்கு முன்னால் நன்கு அறிமுகமான முகமாக ரணில் இருப்பதால் தொடர்ந்து கடன் படுவதற்கு அவர் கோதாவுக்கு தேவைப்பட்டார். அதே சமயம், எதிர்காலத்தில் சஜித் அணி ஆட்சிக்கு வராமல் தடுக்கவும் ரணில் தேவையாக இருந்தது.

தோல்வியுற்ற ஜனாதிபதியாக போக மாட்டேன் என்று அடம் பிடித்த கோட்டா, மக்கள் எதிர்ப்பு அதிகரிக்க அதிகரிக்க, இறுதி முடிவெடுக்கும் நாள் நெருங்கியது. அதே சமயம், காணாமலாக்கப்படும் ஜனாதிபதியாக மாறும் அவலமும் உருவானது. நாடோடியாக மாறி அகதி வாழ்க்கை ஆரம்பமாகப் போவதும் அவருக்குத் தெரியவந்தது.

இதனால், 13ம் திகதி பதவி துறப்பதாக சபாநாயகர் மகிந்த யாப்பாவுக்கு அவர் அதிகாரபூர்வமாக அறிவித்தது. இந்த அறிவிப்பினூடாக போராட்ட வீச்சை குறைக்கலாமென அவர் எண்ண, அது வேறுவிதமாக மாற்றமெடுத்தது. கோதா பதவி விலகினால் அரசியல் சட்டப்படி பிரதமர் ரணில் ஜனாதிபதியாக வரலாமென்ற கருத்து பரவலாகி ரணில் கோ ஹோம் என திசை மாறியது.

ரணிலுக்கு எதிரான போராட்டம் கொழும்பில் பரவலாகியது. ஏற்கனவே அவரது தனிப்பட்ட இல்லத்தை எரித்தவர்கள் இப்போது அவரது அலுவலகத்தை முற்றுகையிட்டனர். ரணில் பல தடவை சூடு கண்ட பூனை. புல்லுக்குள் மறைந்திருக்கும் நச்சுப் பாம்பு. எதற்கும் மசிய வில்லை.



அதேசமயம் திகதியிடப்படாத கோட்டாவின் பதவி விலகல் கடிதம் தயார் எனவும், 13ம் திகதி அவர் பதவி துறப்பது நிச்சயம் எனவும் சபாநாயகர் அறிவிக்க ரணிலுக்கு எதிரான போர்க்களம் விசாலமானது. இதன் அடுத்த நகர்வு அரசியலில் சுனாமி போன்றது.

(18பக்கம் பார்க்க...)

# பொதுப்போக்குவரத்துதான் இப்போது மக்களுக்கு தஞ்சம்!



அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

நாட்டில் பொருளாதார நெருக்கடியை அடுத்து ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இன்று நாடு பெரும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத பொருளாகிவிட்ட எரிபொருளுக்காக மக்கள் நாள் கணக்கில் வரிசைகளில் காத்துக்கிடக்கின்றனர். பல கிலோ மீற்றர்களுக்கு நீளும் இந்த வரிசைகளால் அன்றாடம் பெரும் அவஸ்தைகளும் மோதல்களும் உருவெடுக்கின்றன.

இதனை அடுத்து பொதுப்போக்குவரத்தை பயன்படுத்துவதில் மக்கள் அதிகளவில் நாட்டம் காட்டி வருகின்றனர். ஆனால், இந்தப் பொதுப் போக்குவரத்துகளும்கூட மக்களுக்கு அவ்வளவு இலகுவில் எட்டாததாக மாறி வருகின்றது. இந்நிலையில் பொது மக்கள், பஸ் சாரதிகள், நடத்துநர்கள் வெளிப்படுத்தும் கருத்துக்கள் இவை...

## மக்களால் நிரம்பும் பஸ்கள்



நான் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து காப்பாளராக கிளிநொச்சி சாலையில் கடமையாற்றுகின்றேன். எம்மை பொறுத்தவரை முன்னர் ஆசனங்களின் எண்ணிக்கைக்குதான் பொதுமக்களை ஏற்றி செல்வது வழமை. அதனைவிட அதிகளவில் மக்கள் ஏறுவது குறைவு. ஏதாவது முக்கிய நிகழ்வுகள் அல்லது கொண்டாட்டங்களின் போதுதான் அதிகளவில் மக்கள் ஏறுவார்கள்.

ஆனால், தற்போது அவ்வாறு இல்லை. எம்மால் சமாளிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக பஸ்ஸில் ஒரு நபர் வரும்போது அவருக்குரிய பஸ் பற்றுச்சீட்டை கொடுக்க முடியாத அளவுக்கு கூட்டம் கூட்டமாக மக்கள் பேருந்தில் ஏறுவதன் காரணமாக எம்மால் பஸ் வண்டி பற்றுச்சீட்டு வழங்கும் செயல்பாட்டை வழங்குவது மிகவும் கடினமாகவுள்ளது.

இது கடந்த ஓரிரு வாரமாக மிகவும் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. அனைத்து மக்களும் இந்த பொதுப் போக்குவரத்தையே பயன்படுத்துகிறார்கள். குறிப்பாக பாடசாலைகளுக்கு தற்போது விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த பாடசாலை ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் எமது இ. போ. ச. பேருந்துகளுக்கு பெரும் நெருக்கடியான நிலை ஏற்பட போகின்றது.

மிதி பலகையில் நின்றும் அதிகளவில் மக்கள் பயணிக்கின்றார்கள். அவர்களை இறங்குங்கள் எனக் கூறவும் முடியாது. குறிப்பாக பஸ் தரிப்பிடங்களில் நாங்கள் நிறுத்தாது சென்றாலும் ஓடிவந்து நிறுத்துங்கள், நிறுத்துங்கள் என்று கூறி ஏறுகின்ற நிலை காணப்படுகின்றது. இது தற்போது ஒரு வழக்கமான செயல்பாடாக மாறிவிட்டது. எனவே இந்த நிலைமையிலிருந்து நாங்கள் மீளுவதற்கு எரிபொருள் பிரச்னைக்கு ஒரு தீர்வு கிட்டவேண்டும்.



## தவிர்க்க முடியாத பஸ் பயணம்



தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொதுமக்கள் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

இதன் காரணமாக தனியார் மற்றும் அரச பேருந்துகளில் ஏறும் பொதுமக்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது. கட்டணங்கள் உயர்வடைந்துள்ளபோதிலும் தற்போது பெற்றோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு நிலவுவதன் காரணமாக பொதுமக்கள் பொதுப்போக்குவரத்தை தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்துகிறார்கள்.

இதன் காரணமாக உள்ளூர்ப் பயணம் என்றாலும் வெளியூர் பயணம் என்றாலும் பொதுப்போக்குவரத்துக்கு பெரும் மவுசு காணப்படுகின்றது.

பொதுப்போக்குவரத்தை அன்றாடம் பயன்படுத்தியோரின் எண்ணிக்கையைவிட பல மடங்கு அதிகமாக தற்போது பொதுப்போக்குவரத்தை மக்கள் பயன்படுத்துகின்றனர்.

குறிப்பாக கொழும்புக்கு முன்னர் 1500 ரூபாயுடன் சொகுசு பேருந்தில் சென்று வந்தோம். ஆனால் இன்று 5500 ரூபாய் கொடுத்து கொழும்புக்கு சென்று வரவேண்டி உள்ளது. இவ்வாறான ஒரு நிலைக்கு இந்த நாடு தள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, எரிபொருள் என்பது ஓர் அத்தியாவசிய பொருளாகிவிட்டது.

தற்போது அனைத்து வீடுகளிலும் மோட்டார் சைக்கிள், கார்கள் உள்ளன. இந்த நிலையில் எரிபொருள் பெறுவதற்கு பொது மக்கள் மூன்று, நான்கு நாட்கள் வரிசையில் நின்று குறிப்பிட்ட அளவு எரிபொருள்களை பெறுவதைவிட பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர்.

நாங்கள் கொடிகாமத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு பல மணி நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. கொடிகாமத்தைத் தாண்டிச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் முழுமையாக நிரம்பிச் செல்வதன் காரணமாக நாங்கள் மிதிபலகையில் நின்று பயணம் செய்ய முடியாத நிலையில் அடுத்து வரும் பேருந்தை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

ஆனால், அவ்வாறு எதிர்பார்க்கின்ற போதிலும் அடுத்து வரும் பேருந்தும் சனக் கூட்டம் நிறைந்ததாகவே வருகிறது.

தற்போது அனைத்து மக்களும் பொதுப் போக்குவரத்தை பயன்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் பொதுப்போக்குவரத்துக்கு அதிக மவுசு காணப்படுகின்றது.

குறிப்பாக பஸ் கட்டணங்களை பார்த்தால் இ.போ.ச., தனியார் பேருந்து கட்டணங்கள் அதிகரித்துள்ளன. ஆனால், பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்கு பொது போக்குவரத்தையே பயன்படுத்துகிறர்கள்.

## பொதுப்போக்குவரத்தையே சகலரும் நம்பியுள்ளனர்



நான் இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதியாக கடமையாற்றுகின்றேன். முன்னர் எப்போதும் இல்லாத அளவு பொதுமக்கள் அனைவரும் பாரிய பிரச்னைக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். அதாவது எரிபொருள் பிரச்னை. எரிபொருள் என்பது இப்போது சகலருக்கும் தேவையான ஒன்றாக காணப்படுகின்றது.

ஏனென்றால் இப்பொழுது சகலருக்கும் மோட்டார் சைக்கிள் உண்டு. மோட்டார் சைக்கிளில் செல்லப் பழகிவிட்டோம். அதனால் தற்பொழுது மோட்டார் சைக்கிள் ஓடாது விட்டால் அது பிரச்னையாக காணப்படுகின்றது.

ஆனால், பலர் எரிபொருளை பெறுவதற்கு நீண்ட வரிசைகளில் காத்திருந்து எரிபொருளை பெற்று தமது அன்றாட செயல்பாடுகளை பூர்த்தி செய்கிறார்கள். அவ்வாறு எரிபொருள் பெற முடியாதவர்கள் எமது இ. போ. ச. மற்றும் தனியார் பேருந்துகளை பயன்படுத்தி தமது தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றார்கள். இதன் காரணமாக எமது பேருந்துகளுக்கு அதிக அளவில் பயணிகள் ஏறுகின்ற நிலை காணப்படுகின்றது.

எமது பேருந்துகளும் ஒரு எல்லைக்கு மீறி நிறையினை தாங்கக்கூடிய சக்தி இல்லை. அதன் காரணமாக நாங்கள் ஒரு மட்டத்திற்கு மேல் பொதுமக்களை ஏற்றுவதில்லை. அவ்வாறு ஏற்றாவிட்டாலும் மிதி பலகையில் தொங்கிக்கொண்டு தற்பொழுது பயணிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

இந்த நிலை மாற்றப்படவேண்டும் இந்த நிலை மாற்றப்பட வேண்டுமாக இருந்தால் எரிபொருள் விநியோகம் பொதுமக்களுக்கு சரியானதாக அமைய வேண்டும்

குறிப்பாக நாங்கள் இ.போ.ச சாரதிகள், நடத்துநர்கள் அதிகாலை 4:30 மணி அளவில் வீடுகளில் இருந்து புறப்பட்டு எமது பேருந்து சாலைகளுக்கு சென்று பேருந்துகளை பொறுப்பெடுத்து சேவையை ஆரம்பிக்கின்றோம். ஆனால் எமக்குரிய எரிபொருள் வளங்களில் பெறும் சிக்கல் நிலை காணப்படுகின்றது.

ஓரிரு தடவை பேருந்து சாரதிகள், நடத்துநர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டபோதிலும் தொடர்ச்சியாக இந்த எரிபொருள் வழங்கப்படாமையினால் நாங்கள் வீடுகளில் இருந்து பேருந்துகளை பெறுவதற்கு சாலைக்கு வருவதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றோம்.

இந்த சிரமங்களை பொருட்படுத்தாமல்தான் நாங்கள் பொதுமக்களுக்குரிய சேவையினை தொடர்ச்சியாக வழங்குகிறோம்.

தற்போது அனைவரும் பொதுப் போக்குவரத்தில் தான் பயணிக்கின்றார்கள். பெரிய பெரிய உயர் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள்கூட இந்த அரச பேருந்து மற்றும் தனியார் பேருந்தை நம்பித்தான் அதிகாலையில் வீதிகளில் வந்து நிற்கின்றார்கள்.

ஆனால், அந்த பேருந்தை நடத்துவதற்கு - செலுத்துவதற்கு உரியவர்கள் ஆகிய நாங்கள் வீடுகளில் இருந்து வருவதற்கு உரிய எரிபொருளை உரிய தரப்பினர் பெற்று தருவார்களாக இருந்தால் அது நமக்கு பெரும் உதவியாக இருக்கும். ஆனால் அவ்வாறு பெற்று தருவதற்கு யாரும் முனையவில்லை என்பதுதான் உண்மை.

# இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையுடன் அவசியமாகும் பொருளாதார மறுசீரமைப்பு

நம் ராஜபரம்பரையின் அவல நிலை கண்டு நமக்குத் துக்கம் பொங்குகிறதில்லையா? ஐயோ பாவம், பரிதாபம், இதுபோல் வீட்டைவிட்டு, நாட்டிலிருந்து மக்களால் விரட்டியடிக்கப்பட்டு, எங்கேயோ, எங்கெங் கேயோ அல்லாடும் ராஜ சகோதரர்களின் துர்பாக்கியத் தைக் கண்டு எமக்குக் கண்ணில் நீரும் நெஞ்சில் உதிரமும் கொட்டுகிறதல்லவா?

பெரிய ராஜா மஹிந்தவும் அவரின் செல்ல சகோதர ரான பசிலும் இலங்கையை விட்டுச் செல்ல ஜூலை 28ஆம் தேதிவரை தடை விதித்துள்ளது உயர் நீதிமன் றம். இரண்டு பேரும் நீதிமன்றத்தின் ஒப்புதலில்லாமல் எங்கேயும் தப்பி ஓடமுடியாது.

பிரபாகரனின் தமிழ்ப் புலிகளுக்கு எதிரான போரில் வென்று அதிகாரத்தையும் மக்களின் அன்பையும் தன்வசப்படுத்தி, சிங்கள மக்களால் கொண்டாடப் பட்டு, இந்தத் தீவு தேசத்தின் சக்கரவர்த்தியாக மஹிந்தா இருந்து வெகுகாலம் ஆகவில்லை. ஆனால், இப்போது அதே மக்கள் அவரை ஆட்சிக் கட்டிலிலிருந்து விரட்டி யடித்துள்ளனர். தனக்கு விருப்பமானவர்களை உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமித்துள்ளார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது போய், இப்போது அதே நீதிபதிகள் அவர் வெளி நாடு செல்லத் தடை விதித்துள் ளனர். இவரது தம்பியும் இந்நாட்டின் அதிபருமான




கோட்டாபய சற்று அதிர்ஷ்டம் பெற்றவர். திருட்டுத் தனமாக, இருட்டில், விமானப் படை விமானத்தில், மாலைதீவுகளுக்குத் தப்பிச் சென்று, அங்கிருந்து சவுதி அரேபிய ஏர்லைன்ஸ் விமானத்தில் சிங்கப்பூருக்குச் சென்றார். ஆனால், அங்குள்ள ஹலிமா யாகோப் அரசு அவருக்கு எந்தவிதமாகவும் அடைக்கலம் அளிக்க மறுத்துவிட்டது. அதிகபட்சம், ஒரு நோயாளியாகச் சில காலம் மருத்துவமனையில் அந்நாட்டிலிருக்கலாம்.

கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் மக்கள் கோபம் என்ற அக்னிக்கு நெய் ஊற்றுவது போல், ராஜபக்ஷவினரின் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன (எஸ் எல் பி பி), கோட்டாபய தேசத்திற்குச் செய்துள்ள சேவைகள் குறித்து குறிப்பாக, '30 ஆண்டு காலக் கொடும் தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்து தாய் நாட்டில் அமைதியை மீட்பதில் அவரின்


## தமிழ் அரசியல் தலைமைகள் அவசரத்தை உணரவேண்டும்

உறுதியான பங்களிப்பு' குறித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. எஸ் எல் பி பி-யின் அந்த அறிக்கை யில், ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றவும் தக்க வைத்துக் கொள்ளவும் எந்த எல்லைக்கும் செல்வது உலகத் தலைவர்கள் பெரும்பாலும் செய்வதுதான் என்ற நிலை யிலும், அரசியலில் தனது பதவியை விட்டுக்கொடுப்பது என்பது ஓர் அரிய காட்சியாகும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. 'ஓர் அயோக்கியனின் கடைசி புகலிடமான அரசியல் ஒரு சாக்கடை' என்று ஒரு மேற்கோள் உள்ளது. இது கோட்டாபயவுக்கு அப்படியே பொருந்துகிறது. இத்தகைய அறிக்கைகள் இலங்கை இளைஞர்களை மேலும் ஆத்திரமூட்டி, வன்முறையை வளர்க்காமல் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

ஒரு தேசிய அரசை அமைக்க, அருகி வரும் விவேக முள்ள அரசியல் தலைவர்களும் கட்சிகளும் ஒன்றி ணைய வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. இத்தகைய அரசு உருவாவது, பல்வேறு சர்வதேச, உள்நாட்டு மன்றங்களில் முழு வீச்சில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் அரசியல் ஸ்திரத்தன்மை உருவாக்க வும், இலங்கைத் தீவு தேசம் அராஜகத்தின் பிடியில் சென்று விடுவதைத் தடுக்கவும் மிகவும் அவசியமாகி றது.

கோட்டாபய தப்பியோடியதையடுத்து, 'வீட்டுக்குச் செல் கோட்டா' என்ற முழக்கத்தை முன்னெடுத்துள்ள போராட்டக்காரர்கள், அநேகமாக எல்லா இடங்களி

லும் தங்கள் போராட்டைத்தை ஓரளவுக்குத் தணித்துக் கொண்டிருந்தாலும், எதிர்ப்பைக் கைவிடவோ, ராஜ பக்ஷ குடும்பத்தின் மீதான கோபத்தைக் குறைத்துக் கொள்ளவோ இல்லை. இப்போது, அந்த அவமானகர மான குடும்பத்தினர் அனைவரும் உட்பட கோட்டாபய மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, விசார ணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.



இலங்கையின் கோபம் கொண்ட இளைய சமுதாயத் தினருக்குத் தொலைதூர தேசமான இங்கிலாந்திலிருந்து ஆதரவுக் குரல் ஒலிக்கிறது. அந்நாட்டுப் பாராளுமன் றத்தில் வியாழனன்று அவசர அமர்வு நடைபெற்றது. லிபரல் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் எட் தவே, இங்கிலாந்து தனது சர்வதேசக் கூட்டாளிகளுடன் இணைந்து செயல்பட்டு, கோட்டாபயவுக்கு எதிராகக் கைது உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார். தப்பியோடிய குற்றவாளியையும் அவரது சகோதரர் உட்பட, பெரும் ஊழல் மற்றும் மனித உரிமை மீறல் தொடர்புடைய கூட்டாளிகள் எவரையும் விசாரணைக்குட்படுத்துவது இலங்கையின் எதிர்காலத்திற்கு மிகவும் அவசியமானது.

## சென்னை மடல்

-பகவான் சிங்-

போராட்டக்காரர்களின் கொந்தளிக்கும் கோபமும் அரசியல்வாதிகளின் சுயநலமும் பட்சபாதமான முன்னபிப்பிராயங்களும் களத்தில் இருப்பவர்களின் கண்களை மறைக்கின்றன. கொழும்பிலிருந்து கோட்டாப யவின் தப்புதலில் தனக்கு எந்தப் பங்கும் இல்லை என்று இந்தியா கூறிக்கொண்டாலும், அப்படி நிகழ்ந்திருக்கக் கூடிய வாய்ப்பை நான் மறுப்பதற் கில்லை. காரணம், இலங்கை மக்களுக்கு மட்டு மல்லாமல், இந்தியப் பெருங்கடல் பகுதி முழுமையின் நன்மைக்கும், இலங்கையின் அரசியல் ஸ்திரத் தன்மையும் பொருளா தார மறு சீரமைப்பும் முக்கியமானவை. இந்தப் பகுதியின் மையப் புள்ளியாக இந்தியா இருக்கிறது. காரணம், இந்தியாவின் தெற்கு எல்லையில், ஒரு மீன்பிடிப் படகுப் பயணத்தில் முப்பது

## ராஜபக்ஷ குடும்பத்தை அகற்ற இந்தியாவும் நட்பு நாடுகளும் உத்தி?

ஆனால், அரசியல் ஸ்திரத்தன்மையை மீட்பது, அரசுக்கு எதிரான போராட்டங்களைத் தணித்து, நாட்டின் பொருளாதாரத்தை மறு சீரமைப்பது அதிக முக்கியத்துவமும் உயர் முன்னுரிமையும் பெறுகின்றன. இருளில் மூழ்கியுள்ள நாட்டைப் புதிய விடியலை நோக்கி இட்டுச் செல்ல இந்த மூன்று அம்சங்களும் மிகவும் இன்றிய மையாதவை.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில், கோட்டாபயவைக் கைதுசெய்யவேண்டும் என்ற கோரிக்கையைத் தவிர, 'இலங்கையில் உள்ள ஜனநாயகவாதிகளை ஆதரிக்க வழிவகுக்கும் முழு பொருளாதார மற்றும் அரசியல் தீர்வுக்காக இங்கிலாந்து, தனது சர்வதேசக் கூட்டாளிகளுடன் இணைந்து முனைய வேண்டும் என்றும் கூறியுள்ளார் எட் தவே. கோட்டாபய மற்றும் அவருடைய கூட்டாளிகளைக் கைதுசெய்ய சர்வதேச உத்தரவு பிறப்பித்து, இலங்கை யில் உள்ள ஜனநாயகவாதிகளை ஆதரிக்க இவர் குரல் கொடுத்துள்ளார்.

நிமிடங்களில் அடையும் தூரத்தில் இலங்கை இருப்பதுடன், தமிழக மக்கள், தங்களது யாழ்ப்பாண சகோதரர்களைத் தொப்புள்கொடி உறவுகளாகக் கருதுகிறார்கள்.

ஒரு பார்வையாளரின் கண்ணோட்டத்தில், குழப்ப மான நிலையில் உள்ள தீவுக்கு உறுதியான எதிர் காலத்தை உருவாக்க, இந்தியாவும் அதன் நட்பு நாடு களும் முதலில் ராஜபக்ஷ குடும்பத்தைக் கொந்தளிக்கும் களத்திலிருந்து அகற்றுவதற்கான ஓர் உத்தியை முடிவு செய்திருக்கலாம். இதன் மூலம், அவர்கள் தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதற்கு எதிரான கோபக்கனலைத் தணிப்பதும் நீண்டகால அரசியல் தீர்வை நோக்கிச் செல்வதும் சாத்தியமாகும். ராஜபக்ஷ குடும்பத்தைத் பற்றிப் பிறகு சிந்திக்கலாம். தற்போது, அவர்களைத்



இலங்கைச் சிக்கலைத் தீர்க்கும் வகைகளை ஆய்ந்து அலசிவரும் சர்வதேசக் கூட்டணியில் இந்தியா ஒரு முக்கிய உறுப்பினர் என்பது சொல்லாமலே விளங்கும். இந்தப் பிராந்தியத்தின் 'குவாட்' தலைமையை இந்தியா ஏற்றுச் செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இலங்கைக்குப் பொருளாதார உதவிகளைச் செய்து வருகிறது. இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்ச கமும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கும் இலங்கைக்கு உதவ இந்தியா ஆவன செய்யும் என்று குறிப்பிடத்தக்கது. இதே போன்ற ஓர் உறுதியை அமெரிக்காவும் அளித்துள்ளது. "கோட்டாபய ராஜபக்ஷ இராஜிநாமாவையடுத்து, அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து அரசை அமைக்கவும் பொருளாதாரமுடக்கத்துக்குத் தீர்வு காணவும் முனைய வேண்டும். இலங்கை மக்களின் ஜனநாயக நோக்கங்க ளுக்கு அமெரிக்கா துணை நிற்கும்" என்று ட்வீட் செய்துள்ளார், அமெரிக்காவின் இலங்கைத் தூதர் ஜூலி சங்க்.

முன்னர் ஒருமுறை 'ஈழநாடு' இதழில் நான் எழுதிய ஒரு கருத்தை நினைவுகூர விரும்புகிறேன். 'சில நேரங்க ளில், களத்தில் ஆடும் வீரர்களை விட, பார்வையாளராக தொலைவிலிருந்து கலரியிலிருந்து பார்ப்போருக்குத் தெளிவான பார்வை இருக்கும்'. அரசியல் ஸ்திரத்த ன்மை, பொருளாதார மறு சீரமைப்பு ஆகிய பெரிய விஷயங்களை, 'வீட்டுக்குச் செல் கோட்டாபய'

தங்களின் பார்வைக்குள் வைத்திருந்தால் போதும். இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டி யெழுப்ப உதவுவது பற்றிச் சிந்தனையிலிருக்கும் சர்வ தேச சமூகத்திற்கு நம்பிக்கையை அளிக்கும் ஒரு நிலை யான அரசாங்கத்தைக் கொழும்பில் உருவாக்குவதே இந்த நாடுகளின் முன்னுரிமையாகும். இந்தத் திட்டத் தில் முக்கிய பங்கு வகிக்க இந்தியாவுக்கு ஒரு கூடுதல் காரணி உள்ளது - கொழும்பில் அடுத்த ஆட்சியாளர் தில்லி ஆதரவு சி இஓ-வாக இருந்தால், அவர் தமிழர்க ளுக்கும் ஆட்சியில் பங்களிப்பதை உறுதி செய்ய ஏதுவாகும். இது, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் உறுதியான நிலைப்பாட்டை விரைவு படுத்துவதை உறுதி செய்யும். ஆனால் இதற்காக, தமிழ் அரசியல் தலைமைகள் குறைந்த பட்சம் இப்போதாவது, தனிப்பட்ட, முன்னபிப்ராயங் களைக் களைந்து, சுயநல நோக்கங்களைத் துறந்து செயல்பட வேண்டியதன் அவசரத்தை உணர்ந்து கொள்வது அவசியம். இவர்களுக்குப் பொது மக்களும் சமூக அமைப்புகளும் அழுத்தம் கொடுப்பது காலத்தின் கட்டாயம்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.




# இங்கிலாந்தின் மீளெழுச்சி

கடந்த போட்டியில் இந்திய அணிக்கு பும்ரா என்ன செய்து கொடுத்தாரோ அதே விஷயத்தை இரண்டாவது போட்டியில் இங்கிலாந்துக்கு டாப்லி செய்து கொடுத்தார். பும்ரா வீழ்த்தியதை போன்றே போட்டியை வெல்ல 6 விக்கெட்டை கைப்பற்றினார்.

முதல் ஒருநாள் போட்டியை போட்டியை அப்படியே மீட்டிப் பார்க்க வேண்டும். ஆனால்இ அந்தப் போட்டியில் இங்கிலாந்துக்கு என்ன நிகழ்ந்ததோ அது அப்படியே இங்கே இந்தியாவுக்கு நிகழ வேண்டும். இப்படி ஒரு விநோத கட்டுப்பாடோடு ஒரு போட்டி நடந்தால் எப்படியிருக்கும் என்பதற்கான சாட்சியாகத்தான் அமைந்திருக்கிறதுஇ இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையேயான இரண்டாவது ஒருநாள் போட்டி.

முதல் போட்டியில் இந்திய அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்றிருந்தது. இந்த இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றிருக்கிறது.

இந்திய அணியின் தலைவரான ரோஹித் சர்மாவே நாணயச் சுழறசியை வென்றிருந்தார். கடந்த போட்டியின் தாக்கத்தில் முதலில் பந்துவீசப்போவதாக அறிவித்தார். இந்தியாவின் ஆடும் பதினொருவர் அணியில் மீண்டும் கோலி இடம் பெற்றிருந்தார்.

ரோஹித்தின் நாணயச் சுழற்சி முடிவுஇ இந்திய அணிக்கு நல்ல விளைவுகளையே ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தப் போட்டியிலும் இங்கிலாந்து அணி சகல விக்கெட்களையும் இழந்தது. 49 ஓவர்களில் 246 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தனர். கடந்த போட்டியை போல பும்ராவிடம் சிக்காவிட்டாலும், இங்கிலாந்து தடுமாறவே செய்தது. இந்த முறை அந்தத் தடுமாற்றத்தைக் கொடுத்தவர் சஹால். பும்ராவும் ஷமியும் தங்களின் முதல் “ஸ்பெல்“லை வீசி சென்றனர். அதில் விக்கெட்டே இல்லை. இதனால் 10 ஓவர் முடிவதற்குள்ளாகவே ஹார்திக் பாண்ட்யா அழைக்கப்பட்டார். அவர் வீசிய முதல் ஓவரிலேயே ராயின் விக்கெட்டை வீழ்த்திக் கொடுத்தார்.




ஹார்திக் பாண்ட்யா விக்கெட் வேட்டையை தொடங்கி வைக்க அடுத்து சஹால் புகுந்து அசரடித்தார். 15-22 இந்த ஓவர்களுக்குள் பெயர்ஸ்ரோ, ரூட், ஸ்ரோக்ஸ் என மூன்று பெரிய தலைகளையும் காலி செய்தார்.

இந்த மூவரில் பெயர்ஸ்ரோ “போல்ட்” ஆகியிருந்தார். ரூட்டும் ஸ்டோக்ஸூம் எல். பி. டபிள்யூ. ஆகியிருந்தனர். மூவருமே ஸ்வீப் மற்றும் ரிவர்ஸ் ஸ்வீப் ஆடும் முயற்சியிலேயே தங்களின் விக்கெட்டை பறிகொடுத்தனர். பட்டிமன்ற பேச்சாளர்கள், குழந்தைகளுக்கு தன்னம்பிக்கைக் கதை சொல்பவர்கள் இனி புதிதாக சஹாலை பற்றிய கதைகளையும் கூறலாம். அப்படி ஒரு கதையை கூறும்பட்சத்தில் சஹாலின் துணிச்சலும் ரிஸ்க் எடுக்கும் தன்மையுமே அந்தக் கதையின் மையக்கருத்தாக அமையும்.

ஸ்பின்னர்களை எதிர்கொள்ள இங்கிலாந்து வீரர்கள் கைக்கொண்டிருக்கும் முக்கிய சூத்திரம் ஸ்வீப் வகையறா ஷாட்களை ஆடுவதுதான். நல்ல ஃபுல் லெந்தில் தூக்கி வீசப்படும் பந்துகளில் ஸ்வீப்களை எளிதாக ஆட முடியும். இங்கிலாந்து பேட்டர்களும் இந்த மாதிரியான டெலிவரிக்களில்தான் அதிகமாக ஸ்வீப்களை ஆடுகின்றனர்.

சஹாலின் ஃபுல் லெந்த் டெலிவரிக்களுக்கான பதிலடியாகவும் ஸ்வீப் ஷாட்தான் இருந்தது. ஆனாலும், சஹால் டிஃபன்ஸிவ்வாக யோசித்து தனது லெந்த்தை மாற்றிக் கொள்ளாமல், வழக்கம் போல அவரது பாணியிலேயே ஃப்ளைட்டட் டெலிவரிக்களாகவே வீசிக்கொண்டே இருந்தார்.

ஸ்ரோக்ஸ் எல்லாம் தொடர்ந்து துடுப்பு மட்டையை திருப்பி ரிவர்ஸ் ஸ்வீப் ஆடிக்கொண்டே இருந்தார். அப்போதும் சஹால் ஓயவில்லை. மீண்டும் மீண்டும் அதே பாணியில் தாக்கினார். கடைசியில் மூவரும் அவரிடமே வீழ்ந்தனர். சஹாலின் துணிச்சல்தான் அவரின் பெரும்பலம் என்பதற்கான மற்றுமொரு சாட்சி இது. சஹால் வீழ்த்திய இன்னொரு முக்கிய துடுப்பாட்ட வீரரான மொயீன் அலியுமே ஸ்லாக் ஸ்வீப்பில்தான் வீழ்ந்தார்.

முக்கியமான விக்கெட்களை குறுகிய இடைவெளியில் இழந்தாலும் மொயீன் அலி, லிவிங்ஸ்டன், டாப்லி போன்றோரின் கணிசமான பங்களிப்பால் இங்கிலாந்து அணி ஓரளவுக்கு கௌரவமான ஓட்டத்தை எட்டியது.

இந்திய அணிக்கு இலக்கு 247. பந்துவீசி முடித்த போது ஆட்டம் இந்தியாவின் கையில் இருப்பதாகவே தோன்றியது. ஆனால், அடுத்த அரை மணி நேரத்தில் எல்லாமே மாறியது. இந்திய துடுப்பாட்ட வீரர்கள் திணறினர். அதுவும் இங்கிலாந்து துடுப்பாட்டவீரர்களை விட கடுமையாகத் திணறினர். கடந்த போட்டியில் இந்திய அணிக்கு பும்ரா என்ன செய்து கொடுத்தாரோ அதே விஷயத்தை இந்தப் போட்டியில் இங்கிலாந்துக்கு டாப்லி செய்து கொடுத்தார். பும்ரா வீழ்த்தியதை போன்றே போட்டி வெற்றிக்கு 6 விக் கெட்கள்.

காலங்காலமாக தொடரும் இடதுகை பந்துவீச்சாளர்களுக்கு எதிரான இந்திய துடுப்பாட்ட வீரர்களின் திணறல் இங்கேயும் தொடர்ந்தது.

கடந்த போட்டியிலேயே டாப்லி 5 ஓவர்களை மட்டுமே வீசியிருப்பார். அதில் 3 ஓவர்கள் ஓட்டமற்ற ஓவர்களாகியிருக்கும். கடந்த போட்டியில் டாப்லிக்குக் கிடைக்காத விக்கெட்கள் இந்தப் போட்டியில் கிடைத்தன.

ரோஹித் மற்றும் தவான் ஆரம்ப வீரர்களாக இறங்கியிருந்தனர். இடதுகை பந்துவீச்சாளர்களான டாப்லியும் வில்லியும்தான் முதல் 10 ஓவர்களை வீசியிருந்தனர். அதில், முதல் 4 ஓவர்களில் ரோஹித்தும் சரி தவானும் சரி ஓர் ஓட்டத்தைக்கூட அடிக்கவில்லை. வந்திருந்த 5 ஓட்டங்களும் லெக் பைஸின் மூலமே வந்திருந்தது. ஓட்டக் கணக்கை தொடங்காமலேயே டாப்லியின் பந்தில் ரோஹித் எல். பி. டபிள்யூ ஆனார்.

கொஞ்ச நேரம் நின்ற போதும் தவானும் டாப்லியிடமே வீழ்ந்தார். லெக் சைடில் எகிறி சென்ற பந்தில் துடுப்பில் பட்டு பிடியெடுப்பாகி வீழ்ந்தார். தரமான ட்ரைவ்கள் மூலம் கோலி சில பௌண்டரிகளை அடித்த போதும் அவரும் வில்லியின் பந்தில் வழக்கம்போல அவுட் சைட் ஓவ் ஸ்டம்ப் லைனில் வீழ்ந்தார். பந்த வந்த வேகத்திலேயே கார்ஸின் முழுவேகப் பந்தில் பிடியெடுப்பாகி வெளியேறினார்.

31 ஓட்டங்களுக்குள் இந்திய அணி 4 விக்கெட்களை இழந்திருந்தது. சூர்யகுமார் யாதவ், ஹர்திக் பாண்ட்யா, ஜடேஜா எல்லாம் கொஞ்சம் நின்றாலும் அது இந்திய அணியை சரிவிலிருந்து மீட்கப் போதவே இல்லை.

இந்திய அணி 146 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இங்கிலாந்து 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கங்குலி, சச்சின், டோனி, ரெய்னா என பல முன்னாள் சுப்பர் ஸ்ரார்களும் இந்தப் போட்டியின்போது மைதானத்தில் ஆஜராகியிருந்தனர். முன்னாள் வீரர்களையெல்லாம் பார்த்தவுடன் இந்தப் போட்டியை ICC நொக் அவுட் என்று இந்திய துடுப்பாட்ட வீரர்கள் நினைத்துவிட்டார்கள் என ஒரு மீம் உலாவிக் கொண்டிருந்தது.



# ஜனாதிபதி மாளிகை என்றழைக்கப்படும் இராணி மாளிகை- இலங்கையின் வரலாற்றுப் பொக்கிஷம்

**- என்.கே.எஸ்.திருச்செல்வம்**

இலங்கையில் கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் போது இலங்கையின் தலைநகரான கொழும்பு கோட்டையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த, அதி உச்ச பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள, தலைநகரின் இதயம் என வர்ணிக்கப்படும், இலங்கை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசல்தலமான ஜனாதிபதி மாளிகை எனும் இராணி மாளிகை போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டது.

இன்று ஜனாதிபதி மாளிகை எனப் பெயர் பெற்றிருக்கும் இக் கட்டிடம் 1972 ஆம் ஆண்டு முதலே இப்பெயரில் அழைக்கப்பட்டது. அதற்கு முன்பு இதன் பெயர் இராணி மாளிகை என்பதாகும். இன்று நாம் காணும் இம்மாளிகை 218 ஆண்டுகள் பழமைவாய்ந்த தொல்பொருள் சின்னமாகும்.

இம்மாளிகை கைப்பற்றப்பட்டவுடன் இது பொதுமக்களின் பார்வைக்கு விடப்பட்டது. இம்மாளிகை கைப்பற்றப்பட்ட அடுத்த நாள் காலையில் நானும் அதைப் பார்வையிடச் சென்றிருந்தேன். பழமைவாய்ந்த பொக்கிஷமாகப் பாதுகாக்கப்படவேண்டிய இம்மாளிகையின் உள்ளே நான் கண்ட காட்சிகள் சற்று மனவேதனையை அளித்தன.

அம்மாளிகைக்குச் சென்ற மக்கள் இது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அவர்களின் வீடு எனும் எண்ணத்திலேயே பார்வையிடுகின்றனர். இங்கு வருகை தரும் மக்கள் எல்லோரும் மாளிகையின் கட்டிடத்தின் பாகங்கள் மற்றும் தளபாடங்கள் மீது அமர்ந்து புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் அங்குள்ள பழமை வாய்ந்த தளபாடங்கள், மற்றும் கட்டிடத்தின் பாகங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதன் காரணமாக இப்பழமை வாய்ந்த கட்டிடத்தின்சில பகுதிகள்சேதம் அடைந்ததாகவும் செய்திகள் வெளிவந்தன.

இந் நிலையின் இம்மாளிகையின் முக்கியத்துவம் மற்றும் பெறுமதி ஆகியவை பற்றிய விபரங்களை இங்கே பதிவிடுகிறேன். சுமார் 5 நூற்றாண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கேயர் எனும் ஐரோப்பிய நாட்டு இனத்தவர்கள் இலங்கைக்கு வந்தனர். நாடு பிடிக்கும் நோக்கில் ஒவ்வொரு நாடாகக்



கைப்பற்றிய போர்த்துக்கேயர் 1505 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதி இலங்கையில் கால் பதித்தனர். இக்காலகட்டத்தில் தென்னிலங்கையில் உள்ள கோட்டை இராச்சியத்தில் வீர பராக்கிரமபாகு எனும் மன்னனும், வட இலங்கையில் உள்ள யாழ்ப்பாண இராச்சியத்தில் சிங்கை பரராசசேகரன் எனும் மன்னனும் ஆட்சி செய்து வந்தனர்.

இக்காலகட்டத்தில் பீரங்கிகள், மற்றும் துப்பாக்கிகளுடன் கொழும்புக்கு வந்த போர்த்துக்கேயர் கடற்கரை ஓரமாக தாம் தங்குவதற்கு ஓர் இடம் வேண்டும் எனக் கேட்டு அவ்விடத்தைச் சுற்றி மரக் கட்டைகளை நட்டு அவற்றில் ஆட்டுத் தோல் பட்டிகளைக் கொண்டு வேலியடைத்து அவ்விடத்தில் தங்கினர். பின்பு அவ்விடத்தில் ஒரு சிறிய கோட்டையைக் கட்டி, அதை தமது தேவைக்காகப் பயன்படுத்தி வந்தனர். இதுவே இன்று ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள இடமாகும்.

சுமார் 100 ஆண்டுகள் இக்கோட்டை போர்த்துக்கேயர் கைவசம் இருந்தது.

அதன் பின்பு 1670 ஆம் ஆண்டளவில் இக்கோட்டையை ஒல்லாந்தர் கைப்பற்றினர். கோட்டையின் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் கடல் இயற்கை அரணாக அமைந்திருந்தது. கோட்டையின் வடக்கில் இருந்த கடலையும், தெற்கில் இருந்த பேரை வாவியையும் தொடர்புபடுத்தி, கிழக்குப் பகுதியில் ஓர் அகழியை வெட்டினர். மேற்கில் இருந்த கடலையும், பேரை வாவியையும் தொடர்புபடுத்தி, தெற்கிலும் ஒரு அகழியை வெட்டினர். நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட பாதுகாப்பான உள் கோட்டை உருவானது.

கோட்டையைச் சுற்றி 8 உயர்ந்த காவலரண்கள் அமைக்கப்பட்டன. கோட்டையின் உள்ளே அலுவலகம், ஆயுத களஞ்சியம், படைத்தளம் ஆகியவற்றைக் கொண்ட 4 கட்டிடங்கள்அமைக்கப்பட்டன. வெட்டப்பட்ட கிழக்கு, தெற்கு அகழிக்கு வெளியே இரண்டு சிறிய வெளிக் கோட்டைகள் அமைக்கப்பட்டன.

அதன் பின்பு 1798 ஆம் ஆண்டு இக்கோட்டையை ஒல்லாந்தரிடம் இருந்து ஆங்கிலேயர் கைப்பற்றிய போது கோட்டை முற்றாக அழிக்கப்பட்டது.

இக்கோட்டையின் மத்தியில் 1804 ஆம் ஆண்டு இலங்கை ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இருந்த கால கட்டத்தில், கடைசி ஒல்லாந்த கவர்னராகப் பணியாற்றிய ஜே.ஜி.வன். ஏஞ்சல் பீக் என்பவரால் இம்மாளிகை கட்டப்பட்டது. இம்மாளிகையின் மேற்குத் தோற்றம் கடலை நோக்கியவாறும், கிழக்குத் தோற்றம் மலைகளை நோக்கியவாறும் அமைக்கப்பட்டது.

அதன் பின்பு இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவிய காலப்பகுதியில் சேர் தோமஸ் மேட்லாண்ட் எனும் ஆங்கிலேய கவர்னரினால் இது அரச சொத்தாக ஆக்கப்பட்டது. அத்துடன் கொழும்பு கோட்டையின் மிகப்பெரியதும் மிகச்சிறந்ததுமான வசிப்பிடமாகவும் இது கருதப்பட்டது. கவர்னர் சேர் எட்வார்ட் பார்னஸ் காலத்தில் 1830ஆம் ஆண்டு இப்பகுதியில் இருந்து கண்டிக்கு நெடுஞ்சாலை அமைக்கப்பட்டது.

இலங்கையின் முலாவது நெடுஞ்சாலையை அமைத்ததன் நினைவாக இம்மாளிகையின் வடக்கு வாயிலின் வெளிப்பகுதியில், பிரின்ஸ் வீதியை நோக்கிய வண்ணம் இவரின் வெண்கலச்சிலை நிறுவப்பட்டது.

இராணி மாளிகை அமைந்திருக்கும் இவ்விடத்தில் இருந்து தான் இலங்கைத் தீவின் எல்லா இடங்களுக்குமான மைல் தூரம் கணக்கிடப்பட்டது.

அதன் பின்பு 1852 ஆம் ஆண்டு முதல் 1856 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், சேர் ஜியோ அண்டர்சன் மற்றும் சேர் ஹென்ரி வார்ட் ஆகியோர் கவர்னராகப் பணியாற்றிய கால கட்டத்தில் இம்மாளிகை திருத்தி அமைக்கப்பட்டது. அப்போது இதற்கு 4 ஏக்கர் பரப்பளவில் பெரிய தோட்டத்துடன் கூடிய வளாகம் உருவாக்கப்பட்டு அதன் மத்தி யில் மாளிகை திருத்தி அமைக்கப்பட்டு, ஒரு அதி உயர்ந்த அரச குடும்பத்தினர் தங்குவதற்கு உகந்த இடமாக மாற்றியமைக்கப்பட்டது.

1883 முதல் 1890 வரையான காலப்பகுதியில் கவர்னராகப் பணியாற்றிய சேர் ஆர்தர் கோர்டன் அவர்கள் விக்டோரியா மகா ராணியின் ஆண்டு விழாவின் போது இராணி மாளிகையின் வடக்குப் பக்கத்தில் இருந்த நிலப்பகுதியை தனது சொந்த செலவில் அழகிய தோட்டமாக உருவாக்கினார். இத்தோட்டத்திற்கு “கோர்டன் கார்டென்” எனப் பெயரிடப்பட்டது. இத்தோட்டத்தைச் சுற்றி பல அரிய வகையான மரங்கள் நடப்பட்டன. அத்துடன் வெள்ளை பளிங்குக் கல்லினால் செய்யப்பட்ட விக்டோரியா மகாராணியின் உருவச் சிலையும் வைக்கப்பட்டது.

இத்தோட்டத்தின் வடக்குப்பக்க மதிற்சுவரை ஒட்டி இப்போது புத்த பகவான், பிள்ளையார், விஷ்ணு பகவான் ஆகியோரின் கற் சிலைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலேயர் காலத்தில் இங்கிலாந்தின் அரச குடும்பத்தினர் இலங்கைக்கு வந்தபோது இம்மாளிகையில் தான் தங்கிச் செல்வர். அவ்வாறு அல்பிரெட், விக்டோரியா மகாராணியின் மகன் எடின்பேர்க் கோமகன், அவரது சகோதரனும் வேல்ஸ் இளவரசனும் பின்பு மன்னருமான 7ஆம் எட்வர்ட், வின்சர் கோமகனும் பின்பு மன்னருமான 5ஆம் ஜோர்ச், குளோசேஸ்டர் சீமாட்டி எலிசபெத் மகாராணி ஆகியோர் இம் மாளிகையில் தங்கிச் சென்றுள்ளனர்.

இத்தனை பழம் பெருமையும், சிறப்புக்களும் வாய்ந்த இம் மாளிகை 1972 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது ஜனாதிபதியான வில்லியம் கோபல்லாவ அவர்களுக்கு வாசல்தலமாக வழங்கப்பட்டது. முதன் தடவையாக ஒரு இலங்கையருக்கு வாசல் தலமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதன் பின்பு இலங்கையின் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்தன, ஆர். பிரேமதாசா, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன இறுதியாக கோத்தாபய ராஜபக்ச ஆகியோர் இம்மாளிகையை தமது வாசல்தலமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

இத்தனை தொன்மை வரலாற்றைக் கொண்ட இம்மாளிகை தொல்பொருள் சின்னமாக பாதுகாக்கப்பட வேண்டும்.

(கட்டுரையாளர்: வரலாற்று ஆய்வாளர்)

---



## வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**அ.கமலநாதன், வெள்ளவத்தை, கொழும்பு**

### கேள்வி:

கோட்டாபய ராஜபக்சவையும் ராஜபக்ச குடும்பத்தையும் ஒட்டுமொத்தமாக விரட்டவேண்டும் என்று ஒற்றுமையாக போராடிய எதிர்க்கட்சிகள் இப்போது ஜனாதிபதி பதவிக்காக பிரிந்துபோய் நிற்கின்றனவே?

### வியுக்தியார்:

அரசுக்கு எதிரான போராட்டத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன்னின்று நடத்தியிருந்தால், இன்று ஆட்சியும் அவர்களுக்கு கிடைத்திருக்கும். ஆனால், அவர்கள் எதிர்க்கட்சியாக தமது தலைமையை சரியாக காட்டாததன் விளைவுதான் இது என்று நினைக்கின்றேன்.

---

**பார்த்திபன் தயாளன், செட்டிபாளையம், மட்டக்களப்பு**

### கேள்வி:

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒரு நாள் கூட ஜனாதிபதியாக பதவிவகிக்க இடம்கொடுக்க வேண்டாம் என்று போராட்டக்காரர்களை நமது எம்.பி.க்கள் சுமந்திரனும் சாணக்கியனும் கூட்டாக கேட்டது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

### வியுக்தியார்:

இதில் என்ன நினைக்க இருக்கின்றது. அவர்கள் இருவரும் இப்படி உசுப்பேத்தி விட்டதால் தானே பிரதமர் அலுவலகத்தை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டார்கள். தத்தமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்காக இப்படி போராட்டக்காரர்களை உசுப்பேத்திவிடுவது எத்தகைய பின்விளைவுகளைத் தரும் என்பதை அறிந்துகொள்ளும் அனுபவமும் ஆற்றலும் அவர்களுக்கு இல்லை என்றே நினைக்கின்றேன். இப்படித்தான், துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டபோது, துரோகிகளுக்கு இயற்கை மரணம் இல்லை என்று சொன்ன அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் பின்னர் அதே ஆட்களால் துரோகியாகவே சுடப்படவேண்டியதாகியது. உசுப்பேத்துவது எப்போதும் ஆபத்தானது என்பதை அறியும் பக்குவம் அவர்களுக்கு இல்லையோ என்னவோ?

---

**ஜோ. அல்வினுஸ், முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

### கேள்வி:

தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்க முன்வரும் நபருக்கு ஜனாதிபதி தெரிவில் ஆதரவளிக்க வேண்டும். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்து முடிவு எடுக்க வேண்டும் என்று நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் எம். பி. தெரிவித்துள்ளார். இதே கருத்தை மதத்தலைவர்களும் தெரிவித்துள்ளனர். நமது எம். பி.க்கள் என்ன செய்வார்கள் என்று நினைக்கிறீர்கள்?

### வியுக்தியார்:

ஜனாதிபதி தேர்தல் ஒவ்வொன்றின்போதும் இது போன்ற கோரிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஆனால் அப்படி கோரிக்கையை விடுத்து அதனை வேட்பாளர் ஏற்றுக்கொண்டால் சிங்கள மக்கள் அந்த வேட்பாளருக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்று கூறிக்கொண்டு ஒவ்வொரு தடவையும் எமது தலைவர்கள் இரகசிய உடன்பாடுகளைத்தான் செய்துகொள்கின்றார்கள். ஆனால் இந்த தேர்தல் அப்படியல்ல, வெறும் இருநூற்றி இருபத்தி ஐந்து எம்.பி.க்கள் மாத்திரமே வாக்களிக்க இருக்கின்றனர். எனவே விக்கினேஸ்வரன் சொல்வது போல செய்வது நல்லதுதான். செய்வார் களா அல்லது வழக்கம்போல இரகசியமாக டீல்களை முடித்துக்கொள்வார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# வினை விதைத்தவர்கள்

குரு அரவிந்தன்

**யூலை மாதம் 1983 - கொழும்பு**
**என் பெயர் கனிமொழி - நான் சொல்வதெல்லாம் உண்மை.**

*கலகக்குரல் சற்றுத் தூரத்தில் கேட்டது.*

*ஆடிவேல் திருவிழாவிற்குச் சந்தோஷமாய் போய் வந்திருந்தோம். அப்போதுதான் சுற்றாடலில் திடீரென அசம்பாவிதங்கள் நடப்பதாகத் தெரியவந்தது.*

*'ஜெயவேவா' என்ற அந்தச் சத்தம் ஒன்றாய், இரண்டாய்ப் பல குரல்களாய் ஒலித்தது. சத்தம் கிட்ட நெருங்க நெருங்க, எந்த நேரமும் அவர்கள் எங்களைத் தாக்கலாம் என்ற பயம் என்னைப் பிடித்துக் கொண்டது. நான் கர்பிணிப் பெண் என்பதால், குழந் தையை வயிற்றில் சுமந்து கொண்டு இருந்தேன். அதனால்தான் குழந் தைக்கு என்னாகுமோ என்ற பயமும் என்னை மேலும் நடுங்க வைத்தது.*

*தற்செயலாக முன்பக்கத்தால் வந்து அவர்கள் தாக்கினால் பின் பக்கத்தால் தப்பி ஓடவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அதுவும் தாக்க வரும் கூட்டத்தைப் பொறுத்தது. அவர்களின் நோக்கம் என்னவென்று தெரியவில்லை. சுற்றிப் பிடித்தால் ஒன்றுமே செய்ய முடியாது. எதற்கும் பின் பக்கத்தால் தப்பி ஓடுவதானால் எப்படித் தப்பலாம் என்று என் கணவரிடம் கேட்டேன்.*

*வேலி ஏறித்தான் குதிக்க வேண்டும். முட்கம்பிவேலி என்பதால் முடியாத காரியம் என்று தான் நினைத்தேன். ஆனால் அவர் சாக்குப் பைகளை எடுத்து முள்கம்பி குத்தாதவாறு சுற்றிப் போடலாம் என்றார்.*

*தப்பி ஓடினாலும் எங்கே போவது, யாரையும் நம்ப முடியாது, தமிழன் என்று காட்டிக் கொடுத்து விடுவார்களே என்று உள்மனசு சொன்னது. தலைநகரில் உள்ள தமிழர்களான எங்களைப் போன்றவர்களின் வீட்டு முகவரிகள் எற்கனவே அவர்களிடம் தயாராக இருந்ததால் அந்த வீடுகளைத் தேடித் தாக்கினார்கள்.*

*எதிர்பார்த்தது போலவே, முன் வாசல் கதவைப் பயங்கரமாக யாரோ இடிக்கும் சத்தம் கேட்டது. கலகக்குரல் இப்போது முன் வாசலில் கேட்டது. கூட்டமாக இடித்தால் கதவு தாங்காது என்பதால், இனியும் பொறுத்திருப்பதில் பலனில்லை என்று நினைத்தேன். பின் வாசல் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்துவிட்டு இருவரும் வெளியே ஓடினோம்.*

*அவர்களில் யாரும் பின் பக்கத்திற்கு வந்ததாக அந்த மங்கிய இருட்டில் தெரியவில்லை.*

*அடுத்த காணியின் எல்லையில் உள்ள முள்கம்பி வேலியைத் தாண்டிப் போகவேண்டும். தயாராக எடுத்து வைத்திருந்த சாக்குப் பையை முட்கம்பி வேலியில் போட்டு அதன்மேல் காலை வைத்து அடுத்த வளவுக்குள் தாவிக் குதித்தோம். எப்படி அந்த நேரம் என்னால் அப்படித் தாவிக்குதிக்க முடிந்தது என்று நானே பின்பு ஆச்சரியப்பட்டேன், ஒருவேளை உயிர்ப் பயம் 'தப்பி ஓடு' என்று என்னைத் துரத்தி இருந்திருக்கலாம்.*

*'அனே, தெமில துவனவா' யாரோ தங்கள் பாஷையில் கூக்குரலிட்டுக் கத்துவது எனது காதிலும் விழுந்தது. சிங்கள மொழி எனக்கும் தெரியும் என்பதால் 'தமிழன் தப்பி ஓடுகிறான்' என்பதுதான் அர்த்தம் என்பது புரிந்தது.*

*நல்ல காலம் யாரும் எங்களைப் பின்தொடரவில்லை. இருள் மண்டிக் கிடந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம். கொலை செய்வது வந்தவர்களின் நோக்கமாக இருக்கவில்லை, கொள்ளையடிப்பதாகத்தான் இருந்தது.*

*அதனால் நாங்கள் உயிர் தப்பினோம். இரவிரவாகத் தப்பி ஓடி அருகே உள்ள கோயிலில் தஞ்சம் புகுந்தோம்.*

*அங்கிருந்து சென்று எங்கள் மூதாதையர் வாழ்ந்த பரம்பரை மண்ணில் குடியேறினோம், யுத்தம் என்ற போர்வையில் அங்கிருந்தும் எங்களை விரட்டினார்கள். புலம் பெயர்ந்து அகதிகளாக நாடு நாடாக எங்களை அலையவிட்டு வேடிக்கை பார்த்தார்கள்.*

**யூலை மாதம் 2022 - கொழும்பு**
**என்பெயர் ரணில் சிங்க: நான் சொல்வதெல்லாம் உண்மை.**

*கலகக்குரல் சற்றுத் தூரத்தில் கேட்டது.*

*'ஜெயவேவா' என்ற அந்தச் சத்தம் பல குரல்களில் கிட்ட நெருங்க நெருங்க, எந்த நேரமும் அவர்கள் எங்களைத் தாக்கலாம் என்ற பயம் என்னைப் பிடித்துக் கொண்டது. எனது மனைவி கோவிட் நோயால் பாதிக்கப் பட்டு இருந்ததால் அவளுக்கு என்னாகுமோ என்று மேலும் அதிர்ச்சியாக இருந்தது.*

*தற்செயலாக முன்பக்கத்தால் வந்து தாக்கினால் பின் பக்கத்தால் தப்பி ஓடவேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அதுவும் தாக்க வரும் கூட்டத்தைப் பொறுத்தது. சுற்றிப் பிடித்தால் ஒன்றுமே செய்ய முடியாது. எதற்கும் பின் பக்கத்தால் தப்பி ஓடுவதானால் எப்படித் தப்பலாம் என்று என்று சிந்தித்தேன்.*

*வாசலில் இராணுவம் காவல் இருந்தாலும், ஆக்ரோசமான அந்தக் கூட்டம் அவர்களையும் கடந்து வந்துவிடலாம். தப்பி ஓடினாலும் எங்கே போவது, யாரையும் நம்ப முடியாது, மக்களுக்கு என்னைத் தெரிந்த படியால் எமது மக்களே காட்டிக் கொடுத்து விடுவார்களே என்று உள்மனசு சொன்னது.*

*எதிர்பார்த்தது போலவே, முன் வாசல் கதவைப் பயங்கரமாக யாரோ இடிக்கும் சத்தம் கேட்டது. கலகக்குரல் இப்போது முன்வாசலில் கேட்டது. இராணுவத்தின் காவலரனை உடைத்துக் கொண்டு வந்திருக்கலாம், இல்லை இராணுவம் அவர்களை எதிர்க்காமல் இருந்திருக்கலாம். கூட்டமாக இடித்தால் கதவு தாங்காது என்பதால், இனியும் பொறுத்திருப்பதில் பலனில்லை என்று நினைத்தேன். பின் வாசல் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்துவிட்டு இருவரும் வெளியே ஓடினோம்.*

*அவர்களில் யாரும் பின் பக்கத்திற்கு வந்ததாக இருட்டில் தெரியவில்லை.*

*'அனே, ரணில் மாத்தயா துவனவா' யாரோ எனது பாஷையில் கூக்குரலிட்டுக் கத்துவது எனது காதிலும் விழுந்தது. சிங்கள மொழிதான் எனது தாய்மொழி என்பதால் 'ரணில் தப்பி ஓடுறான்' என்பதன் அர்த்தம் எனக்கும் புரிந்தது மட்டுமல்ல அவர்கள் எம்மவர்கள்தான் என்பதும் தெரிந்தது.*

*1981 ஆம் ஆண்டு யாழ். நூலகம் எரித்தபோது எல்லோரும் என்மீது சந்தேகக் கண்கொண்டு பார்த்தார்கள், ஆனால் நான் பதவியில் இருந்ததால் யாரும் வாய் திறக்கவில்லை. தப்பித்தவறி வாய்திறந்தவர்களின் முடிவு என்னவென்பதும் அவர்கள் அறிந்தே இருந்தார்கள்.*

*இன்று நான் ஆசையாசையாய் சேர்த்துவைத்த நூல்கள், ஓவியங்கள் எல்லாம் எம்மவர்களால் எரியூட்டப் பட்ட போதுதான், அன்று அவர்கள் உணர்ந்த அந்த வலியை இன்று என்னால் உணர முடிகின்றது.*



**யூலை 2022 - இலங்கை**
**நீதித்தேவதை**

*கலகக்குரல் சற்றுத் தூரத்தில் கேட்டது.*

*'ஜெயவேவா' என்ற அந்தச் சத்தம், பல குரல்களில் கிட்ட நெருங்க நெருங்க, எந்த நேரமும் அவர்கள் தாக்கப்படலாம் என்று எண்ணத் தோன்றியது. எனது கண்களைக் கட்டி வைத்தாலும் என்ன நடக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.*

*1983 ஆம் ஆண்டு இப்படித்தான் கொழும்பிலே இந்தக் கலகக்குரல் ஒலித்த போதே ஏதோ அசம்பாவிதம் நடக்கப் போகிறது என்பதைப் புரிந்து கொண்டேன். இதே 'ஜெயவேவா' சத்தம் தான் அப்போதும் கேட்டது. அன்று தமிழர்களின் உடமைகள் மட்டுமல்ல, உயிர்களும் பறிக்கப்பட்டன.*

*சென்ற வாரமும் அதே 'ஜெயவேவா' குரல் இங்கே மீண்டும் ஓங்கி ஒலித்தது. அன்று கேட்டது தமிழர்களுக்கு எதிரான குரல், இன்று கேட்டது ஆட்சியில் இருப்பவர்களுக்கு எதிரான குரல். ஆட்சியில் இருக்கும் இந்தக் கும்பல்தான் அன்று இனவெறி பேசி அப்பாவிச் சிங்கள மக்களைத் தூண்டி விட்டார்கள். இன்று ஆட்சியாளரான அவர்களுக்கு எதிராகவே அமைதிப் போராட்டம் நடக்கிறது.*

*'அரசன் அன்று கொள்வான், தெய்வம் நின்று கொள்ளும்' என்பதன் அர்த்தம் இப்பொழுது பலருக்குப் புரிந்திருக்கும். தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்று, அதன் அர்த்தம் மட்டுமல்ல, வினைவிதைத்தவர்கள் யார் என்பதும் மக்களுக்கு இப்போது புரிந்திருக்கும்.*

*தன் இனமும், தன் மதமும், தன் குடும்பமும் தான் ஆளப்பிறந்தவர்கள் என்று மார்தட்டி நின்றவர்களும், யார்யாரை எல்லாம் அகதிகள் என்று நையாண்டி செய்து பரம்பரையாக வாழ்ந்த சொந்த மண்ணில் இருந்து கொலைவெறியோடு விரட்டியடித்தார்களோ, அவர்களும் இன்று அகதிகளாக நாடுநாடாக அலைந்து கொண்டிருக்கிறார்கள் ஏதிலிகள் வரிசையில்!*

*குள்ளநரிப்புத்தியால் தப்பிக் கொண்டே அரசபதவிகளில் இருந்தவர்களை, மக்களால் முடியாதபோது, கோவிட் என்ற பெயரில் இயற்கையன்னையே தண்டித்தாள். பொய்யும் புரட்டும் பலநாள் பலிக்காது என்பதால், அதன் பலனாக நாட்டைவிட்டே அவர்கள் இரவிரவாக ஓடவேண்டி வந்தது. தெய்வம் நின்றுதான் கொள்ளும்!*

*ஆனால் "காலமும் கடந்து போகும்" என்பதால், கொள்ளையடித்த பணம் அவர்களிடம் குவிந்து கிடப்பதால், புதிய கதை சொல்லிக்கொண்டு அவர்கள் மீண்டும் வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!*

# ‘உய்குர்’ மக்களின் தேசிய எழுச்சி:

## சீனாவில் இன முரண்பாடுகளும் தொடரும் கலாச்சார ஆதிக்கமும்!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

சீனாவில் சிஞ்சியாங் வடமேற்கு பிராந்தியத்தில் பெரும்பாலும் முஸ்லீம் உய்குர் சமூகத்தை சேர்த்த மக்கள் தொடர்பாக சீனா உலகம் முழுவதிலும் இருந்து பல்வேறு கண்டனங்களையும், விமர்சனங்களையும் எதிர்கொண்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் “மறு கல்வி முகாம்கள்” என்று அரசு வரையறுக்கும் விஷயத்தில் சீனா ஒரு மில்லியனுக்கும் அதிகமான உய்குர்களை தடுத்து வைத்திருப்பதாக சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் நம்புகின்றன. அந்த முகாம்களில் உய்குர்கள் கட்டாய உழைப்பிற்கு பயன்படுத்தப்படுவதாகவும், பெண்கள் வலுக்கட்டாயமாக கருத்தடை செய்யப்படுவதற்கு உட்படுத்தப்படுவதாகவும் அதிக சான்றுகள் உள்ளன.




உய்குர்களை அடக்குவதன் மூலம் சீனா மனிதகுலத்திற்கு எதிரான இனப்படுகொலை மற்றும் குற்றங்களைச் செய்ததாக அமெரிக்கா நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகிறது. உய்குர் இன மக்கள் நெடுங்காலமாக, சீனாவிடமிருந்து விடுதலை பெறக் கோருகின்றனர். ஆனால், சீனா இதைப் பல ஆண்டுகளாக மறுத்துவருகிறது.

### சீனா மீது குற்றச்சாட்டு:

உய்குர்களுக்கு எதிராக சீனா இனப்படுகொலை செய்ததாக தொடர்ந்தும் அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது. சர்வதேச சட்டங்களின்படி, இனப்படுகொலை என்பது ஒரு தேசிய, இன அல்லது மதக் குழுவை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கம் ஆகும். அதன்படி முகாம்களில் உய்குர்களைத் தடுத்து நிறுத்துவதோடு, உய்குர் குழந்தைகளை அவர்களது குடும்பங்களிலிருந்து பிரிப்பது, மக்கள்தொகையை அடக்குவதற்கு உய்குர் பெண்களை சீனா பலவந்தமாக கருத்தடை செய்ய வைப்பதாக சில குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

சமீபத்தில் அமெரிக்க நிர்வாகத்தின் கீழ் டொனால்ட் டிரம்ப் பதவியில் இருந்த போது, அமெரிக்க வெளியுறவு மந்திரியாக இருந்த மைக் பாம்பியோ இந்த சம்பவம் குறித்து தெரிவித்ததா வது, ”அங்கு இனப்படுகொலை நடந்து கொண்டி ருக்கிறது என்று நான் நம்புகிறேன். மேலும் சீனக் கம்யூனிச கட்சி-அரசால் உய்குர்களை அழிக்க திட்ட மிடப்பட்ட முயற்சியை நாங்கள் காண்கிறோம்.” என்று கூறினார்.

சிஞ்சியாங்கில் உள்ள “தீவிரவாத எதிர்ப்பு மையங்களில்” சீனர்கள் ஒரு மில்லியன் மக்களை வைத்திருப்பதாக நம்பத்தகுந்த தகவல்கள் இருப்ப தாக 2018 ஆம் ஆண்டில் ஐ.நா மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது. முகாம்களில் இருந்து தப்பிக்க முயற்சிக்கும் நபர்கள் உடல், மன மற்றும் பாலியல் சித்திரவதைகளை எதிர்கொண்டதாகவும், பெண்கள் கூட்டு கற்பழிப்பு மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானதாகவும் குற்றசாட்டுக்கள் பதிவாகியுள்ளன.

டிசம்பர் 2020இல் நடந்த ஆய்வில் அரை மில்லியன் மக்கள் பருத்தி எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும், மறு கல்வி முகாம்களின் அடிப்படையில் புதிய தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன என்பதற்கான சான்றுகள் இருப்பதையும் கண்டறிந்துள்ளது.

### யார் இந்த உய்குர்கள் ?

மண்ணின் மைந்தர்களான “உய்குர்” மக்கள், துருக்கி மொழிக் குடும்பத்தை சேர்ந்த மொழி பேசுவது டன், இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுகின்றனர். சின்ஜியாங் பிராந்தியத்தில் வடமேற்கு சீனாவில் சுமார் 12 மில்லியன் உய்குர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழும் பகுதி அதிகாரப் பூர்வமாக சிஞ்சியாங் உய்குர் தன்னாட்சி மண்டலம் என்று அழைக்கப் படுகிறது. உய்குர்கள் துருக்கியைப் போலவே தங்கள் சொந்த மொழியைப் பேசுகிறார்கள். மேலும் தங்களை கலாச்சார ரீதியாகவும் இன ரீதியாகவும் மத்திய ஆசிய நாடுகளுடன் மிக நெருக்கமானவர்களாக பார்க்கப்படுகிறார்கள்.




கிட்டத்தட்ட ஈரான் அளவான மாநிலத்தில், பாலைவனத்தையும், அதில் திரியும் அடர்ந்த ரோமங்கள் கொண்ட ஒட்டகங்களையும் அங்கே காணலாம். எரிபொருள் தாகம் கொண்ட சீன பொருளாதாரத்திற்கு, சிங்ஜியாங்கில் கொட்டிக் கிடக்கும் எண்ணையும், எரிவாயுவும் வரப்பிரசாதங்கள். இதனால் சின்ஜியாங் “சீனாவின் குவைத்” என்று பொருளாதார அறிஞர்கள் செல்லப் பெயர் சூட்டியிருந்தனர்.




செல்வச் செழிப்புடன் திகழ வேண்டிய மாநிலத்தில், பொருளாதார ஏற்றத்தாழ்வு இரு வேறுபட்ட இனங்களை எதிரிகளாக்கியுள்ளது. சீனர்களால் சுரண்டப் படுவதாக துருக்கி இனத்தவர்கள் குமுறுகின்றனர். தொழிற்துறை விருத்தி சீனர்களுக்கே சாதகமாக அமைவதாக மனம் வெதும்புகின்றனர். வசதிபடைத்த நகரமயமாக்கப்பட்ட இடங்கள் சீனரின் வாழ்விடமாகவும், ஏழ்மையும், குறைபாடுகளும் கொண்ட குடியிருப்புகளில் உய்குர் மக்களும் இரு வேறு உலகங்களில் வாழ்கின்றனர்.

இந்த உய்குர் இனத்தவர் சின்ஜியாங் மக்கள்தொகையில் பாதிக்கும் குறைவாகவே உள்ளனர். கடந்த தசாப்தங்களில், சீனாவின் பெரும்பான்மை இனத்தவரான ஹான் சீனர்கள் சின்ஜியாங்கிற்கு பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர். இதன் காரணமாக உய்குர்கள் தங்கள் கலாச்சாரமும், வாழ்வாதாரமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதாக உணர்கின்றனர். திட்டமிட்ட அல்லது பொருளாதார நலன்களுக்காக குடியேறும் சீன மக்கள், மாநிலத்தின் குடிசனப் பரம்பலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் தமது பாரம்பரிய மண்ணில், தாம் சிறுபான்மையினராகி வருவதாக உய்குர் இனத்தவர்கள் முறையிடுகின்றனர்.

இது உலகின் பருத்தியில் ஐந்தில் ஒரு பகுதியை உற்பத்தி செய்கிறது. மேலும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு உற்பத்தி செய்யும் பகுதியாகும். மத்திய ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்கு அருகாமையில் இருப்பதால் இதனை ஒரு முக்கியமான வர்த்தக இணைப்பாக பெய்ஜிங் பார்க்கிறது.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், உய்குர்கள் விடுதலை வேண்டி அதன் சுதந்திரத்தை அறிவித்தனர். ஆனால் இப்பகுதி 1949 இல் சீனாவின் புதிய கம்யூனிஸ்ட் அரசாங்கத் தின் முழு நிலப்பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது.

### ஒடுக்குமுறை உருவாக காரணம் என்ன?

1990-களில் இருந்து சின்ஜியாங்கில் உய்குர் மக்களிடையே எதிர்ப்பு மற்றும் பிரிவினைவாத உணர்வு உயர்ந்தது. சில சமயங்களில் இப்பிராந்தியம் முழுமையாக வன் முறையில் மூழ்கியது. 2009 ஆம் ஆண்டில் சின்ஜியாங்கில் ஏற்பட்ட மோதல்களில் சுமார் 200 பேர் இறந்தனர். இந்த சம்பவத்திற்கு சீனர்கள் தங்கள் சொந்த மாநிலத்தை விரும்பும் உய்குர்கள் மீது குற்றம் சாட்டினர்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கூற்றுப்படி, அப்பகுதியில் மக்கள் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறார்கள். எத்தனை முறை தங்கள் வீட்டுக் கதவைப் பயன்படுத்துகிறார்கள் போன்ற மக்களின் நடத்தைகளைக் கண்காணிக்க ஒரு மொபைல் பயன்பாட்டையும் பொலிஸார் பயன்படுத்துவதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

சுமார் ஒரு மில்லியன் உய்குர்கள், கசாக் மற்றும் பிற முஸ்லிம்கள் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்கள் தங்கள் அடையாளத்தை விடுவதற்கான கல்வி கற்பிக்கப்படுவதாகவும், அவர்கள் ஹான் சீனர்கள் ஆதிக்கம் செலுத்தும் கம்யூனிச நாட்டில் ஒடுக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்து பிரிக்கப்பட்டுள்ளனர். குடும்பங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. மொத்த மக்களும் கண்காணிப்பில் வைக்கப்பட்டு உலகின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டிலிருந்து தப்பிக்க முடிந்த சிலரே இந்த முகாம்களில் நிலவும் உடல், மன ரீதியான சித்திரவதைகளையும் பாலியல் சித்திரவதைகளையும் பற்றி பேசுவதாகக் கூறப்படுகிறது.

### இன அழிப்பில் சீனா?

சீனா, இந்த உய்குர் முஸ்லிம் இனத்தை அழிப்பதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த மக்களை தீவிரமாகக் கண்காணிப்பது, சித்ரவதை செய்வது, காரணமின்றி முகாம்களில் அடைப்பது போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் சீனா உய்குர் முஸ்லிம் மக்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறது.

(18 பக்கம் பார்க்க...)

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible]டவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{2}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

24. 2
25. 3
26. 1
27. 2
28. 2
29. 2
30. 3
31. 1
32. 1
33. 1
34. 2
35. 1

### கல்வி tv CHANNEL-1

**17.07.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி tv CHANNEL - 2

**17.07.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஜனாதிபதியின் மன்னிப்பில் விடுதலையாகிறார் ரஞ்சன்?

கொழும்பு, ஜூலை 17

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யு மாறு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குவதற்கான நடவடிக்கை களை துரிதப்படுத்துமாறு அமைச்சர்களான ஹரீன் பெர் னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் பதில் ஜனாதிபதியை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உரிய சட்ட நடைமுறை களை பின்பற்றி இந்த நட வடிக்கையை துரிதப்படுத்து மாறு நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு பதில் ஜனாதி பதி பணிப்புரை விடுத்துள்ள தாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# மேலும் ஏழு இலங்கையர்கள் தமிழகத்தில் தஞ்சம் கோரினர்!

இராமேஸ்வரம், ஜூலை 17

பொருளாதார தஞ்சம் கோரி நேற்று முன்தினமும் வவுனி யாவை சேர்ந்த 7 பேர் இந்தியா வின் தமிழ்நாட்டில் தஞ்சம் கோரியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து சட்டவிரோதமாக தமிழகம் செல்பவர்களின் எண் ணிக்கை அதிகரித்து வருகின் றது.

இந்நிலையில் நேற்று முன் தினம், 2 குடும்பத்தை சேர்ந்த 7 பேர் தமிழகத்தில் தனுஷ் கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர். இவர்கள் தனுஷ்கோடி அருகே முதலா வது மணல் திட்டில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

3 சிறுவர்கள் உட்பட அகதி கள் 7 பேரையும் கண்ட இந்திய கடலோர காவல் படை அவர் களை மீட்டனர். தொடர்ந்து அவர்களை கப்பலில் ஏற்றி அவர்களுக்கு உணவுப்பொருட் கள் கொடுத்து நேற்று முன் தினம் இரவு அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்து சென்றனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர்கள் வவுனியா செட்டிகுளத்தை சேர்ந்த விக்னேஸ்வரன் (வயது 40), இவருடைய மனைவி ராஜ குமாரி (36) மகன்கள் குமரன் (13), வசி (10) மற்றும் அதே பகுதியை சேர்ந்த குமரன் (வயது 38), இவருடைய மனைவி மதினி (வயது 30), மகன் பவின் (6) என்பதும் தெரியவந்தது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி கார ணமாக இதுவரையிலும் தமி ழகத்திற்கு 104 பேர் அகதி களாக சென்றுள்ளனர். (ஐ)

# குளத்தில் குளித்த சிறுவனை இழுத்துச் சென்றது முதலை!

கொழும்பு, ஜூலை 17

முதலையொன்று 7 வயது சிறுவன் ஒருவனை இழுத்துச் சென்ற நிலையில் குறித்த சிறு வன் காணாமல்போயுள்ளாரெ னப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிகிரியாவில் உள்ள நீர்நிலை ஒன்றில் குளித்துக் கொண்டி ருந்த 7 வயது சிறுவனே இவ் வாறு காணாமல்போயுள்ளார்.

தந்தையுடன் சேர்ந்து குளித் துக்கொண்டிருந்த சிறுவனை, அவரின் தந்தை காப்பற்ற முயன்றபோதும் அது பலன ளிக்கவில்லை.

சிறுவனைத் தேடும் நட வடிக்கைகள் இடம்பெற்று வரு வதாக பொலிஸார் தெரிவித்த னர். (ஐ)

## ஓடுமீன் ஓடும்வரை காத்திருந்த...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியின் அதிகாரங் களையும் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற் றவும் அமுல்படுத்தவும் தாம் இயலாதிருப்பதாகக் கருதுவ தால், 2022 யூலை 13ம் திகதி யிலிருந்து அவைகளை நிறை வேற்ற தமக்குரிய அதிகாரத் தின் வாயிலாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதாக கோதபாயவின் அறிவிப்பு சபாநாயகருக்குக் கிடைத்ததை யடுத்து நாடெங்கும் பரபரப்பு உருவானது. ரணிலுக்கு எதி ரான போராட்டம் களை கட்டி யது.

பதில் ஜனாதிபதி என்ற அதி காரத்தில் அவசரகால சட்டம், ஊரடங்கு என்பவற்றை ரணில் பிரகடனம் செய்தார். படை யினர் தங்கள் கைவரிசையை காட்ட ஆரம்பித்தனர். போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக இயங்கிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வன் செயலிலும், அரச சொத்து களை அழிப்பதிலும் நிலைமை தொடருமானால் போராட்டத் துக்கான தங்கள் ஆதரவை நிறுத்தவேண்டி வருமென எச்ச ரித்தது.

போராட்டங்கள் அமைதி யாகின. தாம் பதில் ஜனாதிபதி என்பதால் சகலரும் ஏற்றுக் கொள்ளும் புதிய பிரதமரை நியமிக்குமாறு சபாநாயகரிடம் ரணில் கோரிக்கை விடுத்தார். நிகழ்கால அரசியல் ஆடுகளத் தில் இதுதான் உச்சக் கட்டம். எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை யின்மையால் எதுவுமே வெற்றி பெற முடியாத நிலை. ஒரு கதிரைக்கு இவர்களுள் பலர் போட்டி. இதற்கிடையில் ரணிலைப் பதவி நீக்க நம்பிக்கையில்லாப் பிரேரணை வரப்போவதாகவும் அறிவிப்பு.

இந்த நெருக்கடி நிலையில் கோதபாயவின் பதவி விலகல் கடிதம் சபாநாயகருக்கு 14ம் திகதி கிடைத்ததாக ஒரு செய்தி சொல்ல, அது போலிக் கடித மென இன்னொரு செய்தி சொல்கிறது. அப்படியென்றால் கூடு விட்டுக் கூடு பாய்ந்து திரியும் கோதபாய தொடர்ந் தும் ஜனாதிபதியாக இருக்கப் போகிறாரா?

இலங்கைக்கு உள்நாட்டில் ஒரு ஜனாதிபதி, வெளிநாட்டில் ஒரு ஜனாதிபதி. இதுதான் கோதாவின் நாடகம், ரணிலின் சாணக்கிய விவேகம்.

ஓடு மீன் ஓடி உறுமீன் வரும் வரை காத்திருந்த ரணிலுக்கு ஜிம்கானா சுவீப் அதிர்ஷ்டம். அசைக்க முடியாதவர் என்றி ருந்த இரும்பு மனிதர் அகதி வாழ்க்கைக்கு நாடு விட்டு நாடு பாய்ந்து கொண்டிருக்கிறார். தருணம் பார்த்து சரியாக காய் நகர்த்த லாயக்கற்ற ச(ர்)வகட் சித் தலைமைகள் தங்களுக்குள் அடிபட்டுத் தள்ளாடுகின்றன.

அடுத்தது என்ன? பதவி களில் இருப்பது யார்? இவர் களை நியமிப்பது யார்? இவர் களை அகற்றுவது யார்? யாருக் குத் தெரியும்?



# சபாநாயகர் மகிந்த யாப்பாவை சந்தித்தார் இந்தியத் தூதுவர்!

கொழும்பு, ஜூலை 17

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நேற்று சனிக்கிழமை சந்தித்துப் பேசினார்.

இதன்போது, இந்த முக்கிய மான தருணத்தில் ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு கட்ட மைப்பை நிலைநிறுத்துவதில் பாராளுமன்றத்தின் பங்கை கோபால் பாக்லே பாராட்டி னார்.

இலங்கையின் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொரு ளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என்று இதன்போது உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார் என இந்தியத் தூதரகம் தெரிவித் துள்ளது.

இதேவேளை, இலங்கையர் களுடனான கூட்டு ஒருமைப் பாடும் இந்தியாவின் ஆதரவும் தொடரும். இலங்கையில் தற்போதைய சூழலால் எழுந் துள்ள சவால்களை எதிர் கொள்ள அந்த மக்களுக்கு வழங்கிவரும் ஆதரவுகளில் வெளிப்படும் இந்தியாவின் அர்ப்பணிப்பு, இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் சாகர் கோட்பாட்டை சுட்டிக்காட்டு கிறது என இந்தியா தெரிவித் துள்ளது.

இலங்கையின் தலைமைத்து வம் மற்றும் அரசாங்கம் தொடர்பான தற்போதைய சூழ் நிலைக்கு உடனடியான தீர் வொன்று முன்வைக்கப்படு வதை இந்தியா ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது.

முன்னேற்றகரமான வழி களை கண்டறிவதற்கான சகல சாத்தியமான முயற்சிகளுக்கும் இலங்கை மக்களுக்கு இந்தியா ஆதரவு வழங்கும்.

மிகவும் நெருக்கமானதும் பன்முக அடிப்படையிலுமான இருதரப்பு உறவு காரணமாக பொருளாதார இடர்பாடுகளிலி ருந்து இலங்கை மக்கள் மேலெழுவதற்காக இந்தியா மிகவும் துரிதமாக பதிலளித்து செயல்பட்டது. 3.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதி யான உதவியை துரிதகதியில் தீர்மானம் மேற்கொண்டு இந்தியா வழங்கியது எனவும் இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.(ஐ)

## 'உய்குர்' மக்களின் தேசிய எழுச்சி....

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உய்குர் இன மக்கள் நெடுங் காலமாக, சீனாவிடமிருந்து விடுதலை கோருகின்றனர். ஆனால், சீனா இதைப் பல ஆண்டுகளாக மறுத்து வருகி றது. திபெத்தைப்போல சிஞ்சி யாங்கும் ஒரு தன்னாட்சி பெற்ற பிராந்தியம். ஆனால், நடை முறையில் அது நிகழ்வ தில்லை. சீன அரசுதான் சிஞ்சியானை கட்டுப்படுத்திவருகிறது. இது அதிகமாக பருத்தி விளையக் கூடிய ஓர் இடம். மேலும், எண்ணெய் வளம் மிகுந்த ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது. உய்குர் முஸ்லிம்கள் தங்களின் பகுதியை விடுதலை பெற்ற பகுதியாக அறிவித்திருந்தனர். ஆனால் 1949ஆம் ஆண்டு மாவோ தலைமையில் சீனாவில் ஏற்பட்ட புதிய கம்யூனிஸ்ட் அரசு, அதன் கட்டுப்பாட்டை முழுவதுமாக தனக்குள் கொண்டுவந்தது.

கம்யூனிச கோட்பாடுகளு டன் மத நம்பிக்கை ஒத்துப் போகாத காரணத்தால், மத நம்பிக்கைகளை அழித்தொழிக் கும் முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன. சீன அரசின் உதவியோடு சீனாவின் பெரும் பான்மை இனமான ஹான் குழு வினர் 1950-களில் உய்குர் மக்கள் வாழும் பகுதிகளுக்குக் குடிபெயரத் தொடங்கினர். ஹான் மக்கள் அவர்களுக்கென கட்டமைப்புகளையும், வர்த்த கங்களையும் உருவாக்கினர். தற்போது அங்கு 40 சதவிகித அளவில் ஹான் மக்கள் இருக்கிறார்கள்.

### சீனா ஏன் உய்குர்களை குறிவைக்கிறது?

சீனாவின் மிகப்பெரிய பகுதியான சிஞ்சியாங் நிர்வாக ரீதியாக சீனாவிற்குள் ஒரு தன் னாட்சி பகுதி. தாதுக்கள் நிறைந்துள்ள பகுதி. மேலும், அது இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட எட்டு நாடுகளு டன் எல்லைகளைப் பகிர்ந்துகொள் கிறது. உய்குர்கள் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மாண்டரின் மொழியை தங்கள் சொந்த மொழியாகப் பேசமாட்டார் கள். அவர்கள் சீனாவின் பிரதான நிலப்பகுதியிலிருந்து வேறுபட்ட இனமும் கலாச் சாரமும் கொண்டவர்கள்.

மூன்று ஆண்டுகளில், அரசாங்கம் ஒரு மில்லியன் மக்களை மறு கல்வி முகாம் களில் அனுப்பியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் அவர்களுடைய வேலைகளையும், சொத்துக் களையும் அவர்களின் குழந்தை களையும் விட்டு வெளியேறுகி றார்கள். இந்த தடுப்பு முகாம் களுக்குள் இருந்து சித்திரவதை செய்திகள் வந்துள்ளன.

### பிரிட்டனில் அமைக்கப்பட்ட அதிகாரப்பூர்வமற்ற தீர்ப்பாயம்

சிஞ்சியாங்கில் உய்குர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக சீனா இனப்படுகொலையில் ஈடுபட்டதாக, பிரிட்டனில் அமைக்கப்பட்ட அதிகாரப்பூர் வமற்ற தீர்ப்பாயம் மேற்கொண்ட விசாரணையின் இறுதி அறிக்கையின் வாயி லாகத் தெரியவந்துள்ளது. உய்குர் மக்களுக்கு எதிராக சீன அரசு கருத்தடை போன்ற நட வடிக்கைகளில் ஈடுபட்டதே, இந்த முடிவுக்கு வருவதற்கான முதன்மைக் காரணம் என, அத் தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணையை தலைமையேற்று நடத்திய புகழ்பெற்ற பிரிட்டிஷ் வழக் குரைஞர் சர் ஜப்ரி நைஸ் கூறு கையில், நீண்ட கால விளைவாக உய்குர் முஸ்லிம்கள் உள்ளிட்ட இன சிறுபான்மை மக்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில், திட்ட மிட்ட, முறை யான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கை களில் சீனா ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், சிஞ்சியாங்கில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான துன்புறுத்தல்களுக்கு சீன அதிபர் ஷி ஜின்பிங் உள் ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் முதன்மை பொறுப்பிலிருந்து நழுவியுள்ளனர் என, தீர்ப் பாயம் நம்புவதாக அவர் தெரி வித்தார்.

## புதிய ஜனாதிபதி...

மன்ற உறுப்பினரான விஜித ஹேரத் நேற்று இந்தத் தகவலை வெளியிட்டார்.

இடைக்கால ஜனாதிபதியாக சபாநாயகரை நியமிப்பதற்கும், தேர்தல் நடைபெறும்வரை சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கும் ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு தேசிய மக்கள் சக்தி அனைத்துக் கட்சிகளுடனும் உரையாடியது. எனினும், இந்த விடயம் தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வர முடியாது. இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும ஆகியோர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

இந்த சூழலில், ஜனாதிபதி பதவிக்கான போட்டியால் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது நடைமுறை சாத்தியமற்றது. ஆனாலும், நாங்கள் எங்கள் முயற்சியை கைவிடவில்லை. ஒருமித்த கருத்தை ஏற்படுத்த மத்தியஸ்தம் செய்கிறோம்.

பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ளவர்கள், நாட்டிலுள்ள சிவில் செயல்பாட்டாளர்கள் உட்பட அனைத்து மக்களும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும் நாடு எதிர்நோக்கும் பெரும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண தெளிவான மற்றும் நிலையான தலைமைத்துவத்தைக் கோருகிறோம்.

நாம் அந்த சவாலை பாராளுமன்றத்தில் ஏற்று மக்களால் எதிர்பார்க்கப்படும் முன்மொழியப்பட்ட தலைமைத்துவத்தை முன்வைக்க நாம் தயாராக உள்ளோம். அதை அடைய பாராளுமன்றத்தில் எம்.பிக்களின் ஆதரவு எங்களுக்கு தேவை. இந்தப் பாரதூரமான பொருளாதார நெருக்கடியை தீர்க்க மக்கள் எங்களைக் கோருகின்றனர். நெருக்கடி நிலையை தீர்ப்பதற்கு அரசியல் தலைமைத்துவத்தை எடுப்பதற்கு பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்கெடுப்புக்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவை நாம் முன்னிறுத்துவோம் - என்றார்.

இதேசமயம், ஜனாதிபதி தெரிவு போட்டியில் ஏற்கனவே மும்முனைப் போட்டி உறுதியாகியுள்ள நிலையில் விஜித ஹேரத்தின் அறிவிப்பு நான்கு முனைப் போட்டியை உறுதி செய்துள்ளது. (ஐ)

## அநுர யாப்பா,...

காக அநுர பிரியதர்ஷன, சரத் பொன்சேகா ஆகியோரும் போட்டியிடுவர் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு இவர்கள் போட்டியிடும் பட்சத்தில் இரண்டாவது விருப்பு வாக்கின் அடிப்படையிலேயே ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது.

ஆளும் பொதுஜன பெரமுன கட்சி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவைத் தெரிவித்தபோதிலும், இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் அந்தக் கட்சிக்குள் எழுந்துள்ளது. இதேசமயம், சுயாதீன அணிகளின் ஆதரவை நம்பி டலஸ் அழகப்பெருமவும் சஜித்தும் களமிறங்குகின்றனர். இதில், தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவையே சஜித் பிரேமதாஸ அதிகம் நம்புகிறார்.

எது எப்படி இருப்பினும், தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. 19ஆம் திகதியே முடிவு எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இந்நிலையில், சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தமது உறுப்பினர்கள் எந்த வேட்பாளரையும் ஆதரிக்காது என்று அறிவித்துள்ளது.

இதேநேரம், இடைக்கால ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்படுவது இலங்கை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும். முன்னர், ரணசிங்க பிரேமாஸவின் மரணத்தைத் தொடர்ந்து பதில் ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்க செயல்பட்டார். அவர் மட்டுமே ஜனாதிபதி பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்ததால் அவர் வாக்கெடுப்பின்றி தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாருக்கு,...

அத்துடன், தென்னிலங்கை அரசியல்வாதிகள் யார் ஜனாதிபதி அதிகாரத்துக்கு வருவது என்ற போட்டியில் இருக்கின்றனரே தவிர, இந்த நாட்டை மீண்டும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனை எவருக்கும் இல்லை என்றும் அவர் சாடினார்.

நேற்று வவுனியா கோவில்குளத்தில் இடம்பெற்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 33ஆவது வீரமக்கள் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

"எங்களுடைய மக்களை பொறுத்த மட்டில் இந்த பொருளாதார கஷ்டம் என்பது புது விடயமல்ல. இது ஏற்கனவே எமது மக்கள் அனுபவித்த விடயம். எங்களுடைய மக்கள் நீண்ட காலமாக பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள். இன்று நாடானது பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பெரும்நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அடுத்த கட்டமாக என்ன நடக்குமோ என்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியமை மற்றும் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகியமை என்பவற்றை போராட்டங்கள் மூலமாக இந்த போராட்டகாரர்கள் செய்து காட்டியுள்ளார்கள். நாடு சுதந்திரம் அடைந்தது தொடக்கம் இந்த நாட்டை ஆண்டு வந்த அரசாங்கங்கள் எல்லாமே பொருளாதார வளர்ச்சியிலோ அல்லது அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதிலோ அக்கறை கொள்ளாது சிறுபான்மை இனங்களையும் தேசிய இனங்களையும் அடக்குவதிலேயே தங்கள் முழுமையான கவனத்தை செலுத்தி வந்தார்கள்.

இதேபோன்று பல குடியேற்ற திட்டங்கள் மற்றும் பாராம்பரிய இந்து ஆலயங்களிலே பௌத்த சின்னங்கள் இருப்பதாக கூறி பௌத்த மயமாக்கப்பட்டமை என்பவற்றிலேயே தங்களது நேரத்தையும் நிதியையும் செலவிட்டுவருகின்றது. அதேபோன்று இந்த நாட்டிலே ஏற்பட்ட நீண்ட கால யுத்தமானது நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக அழிக்கின்ற விடயமாகவே இருந்துள்ளது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஒரு துளியேனும் சிந்திக்காது தொடர்ந்தும் ஆக்கிரமிப்பிலேயே ஈடுபட்டு வருகின்றனர். இன்று கூட யார் இந்த அதிகாரத்திற்கு வருவது என்ற போட்டியிருக்கின்றனரே தவிர, இந்த நாட்டை மீண்டும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனை எவருக்கும் இல்லை. இந்த நாட்டின் மீது தமிழ் பிரதிநிதிகள் காட்டுகின்ற அக்கறைகூட தென்னிலங்கை அரசியல்வாதிகளிடம் இல்லை.

தமிழ் அரசியல்வாதிகளான நாங்கள் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டும் என்று எப்பொழுதும் கூறி வருகின்றோம். ஆனால், அவர்கள் ஜனாதிபதி பதவிக்கும் பிரதமர் பதவிக்காகவுமே போட்டியிட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கூட்டமைப்பு என்ன செய்ய இருக்கின்றது என பலரும் கேள்வியெழுப்புகின்றனர். போட்டியாளர்கள் யார் என்பதை பார்த்த பின்பே தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு தீர்மானத்திற்கு வரும். அது என்ன தீர்மானம் என்பதை தற்போது சொல்ல முடியாது. தமிழ் மக்களுக்கு சாதகமான முடிவு ஒன்றையே நாங்கள் எமது தீர்மானமாக எடுப்போம்.

மேலும் சிறையிலே இருக்க கூடிய அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர், பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற விடயங்களை அவர்களிடம் முன்வைப்போம். இவற்றை எல்லாம் யார் எந்த வேட்பாளர் எங்களுக்கு சாதகமாக செயற்படுவார் என்பதை ஆராய்ந்து பார்த்த பின்புதான் எமது ஆதரவை வழங்க முடியும். இதற்காக ஜனாதிபதி வேட்பாளர் அறிவித்த பின்பு தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக கூடி சரியான முடிவை எடுப்போம் - என்றார். (ஐ)

## பொலிஸ்...

இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

பருத்தித்துறை பொலிஸார், மணல் கடத்திச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றை மறித்தனர். ஆனால், அந்த வாகனம் நிற்காத நிலையில் அதனை அவர்கள் விரட்டிச் சென்றனர்.

வேகமாக சென்ற டிப்பர், மாலை சந்தை பிள்ளையார் ஆலயத்தின் சப்பை ரதத் திருவிழாவை முன்னிட்டு இடம்பெற்ற இசைக் கச்சேரியை பார்த்துக் கொண்டு வீதியோரமாக நின்றவர்களை மோதித் தள்ளியது. இதில், 7 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் உடனடியாக அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். இவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

இந்நிலையில், விபத்தை ஏற்படுத்திய டிப்பர் தப்பிச் சென்றுள்ளது.

மணல் கடத்தல் மற்றும் விபத்து சம்பவங்கள் தொடர்பில் பருத்தித்துறை, நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-2)

## பெற்றோலின்...

சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

"உலக சந்தையில் எரிபொருள் விலைகள் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதால், அரசாங்கம் முன்வைத்துள்ள விலை சூத்திரத்தின் பிரகாரம் எரிபொருள் விலைகள் கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும். 16 நாட்களுக்கு முன்னர் உலக சந்தையில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை145 டொலராக காணப்பட்டது. எனினும், தற்போது உலக சந்தையில் ஒரு பீப்பாய் எண்ணெயின் விலை 104 டொலராக குறைந்துள்ளது. ஆகவே, அதன் பயனை மக்களுக்கு வழங்க வேண்டும்.

அனைத்து வரிகளையும் விதித்த பின்னர், லீற்றருக்கு 92 ஒக்ரெய்ன் பெற்றோல் விலையை 110 ரூபாவாலும், 95 ஒக்ரெய்ன் பெற்றோல் விலையை 120 ரூபாயாலும் குறைக்க முடியும்.

இதேபோன்று ஒரு லீற்றர் சுப்பர் டீசலையும் 120 ரூபாயால் குறைக்க முடியும். இந்த விலை குறைப்புகள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு எவ்வித நட்டத்தையும் ஏற்படுத்தாது - என்றும் கூறினார். (ஐ)

## ரணிலை...

கொள்கையாக இருக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரான என். சிறீகாந்தா கூறியுள்ளார்.

டான் தமிழ் ஒளியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகவுள்ள ஸ்பொட் லைற் நிகழ்ச்சிக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி தெரிவில் யாருக்கு வாக்களித்தாலும் ரணிலுக்கு வாக்களிக்கக்கூடாது. ராஜபக்ஷக்களின் பாதுகாவலனே ரணில். அவர் பழைய ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் அல்ல. போராட்டக்காரர்களும் இந்த மனநிலையிலேயே உள்ளார்கள் அவர்களுக்கு எதிராக நாம் இருக்கக் கூடாது.

ரணிலை ஒருபக்கம் விட்டு பிசாசைப் போட்டியிட வைத்தாலும் பிசாசுக்கு வாக்களிக்கலாம். ஜனாதிபதியாக யார் வரவேண்டும் என்பதை விட ரணில் வரக்கூடாது என்பதே இங்கு விடயம்.

இந்த விடயத்தில், கஜேந்திரகுமார் உட்பட எல்லோரும் அவதானமாக இருக்க வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ரணிலை தோற்கடிப்பதே தமிழ்த் தேசியக் கட்சிகளின் 13 பாராளுமன்ற உறுப்பினர்களின் கொள்கையாக இருக்க வேண்டும்.

இதேசமயம், தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்குபவர்கள் எவரும் பதவிகளுக்கு ஆசைப்பட்டு சர்வகட்சி அரசாங்கத்தில் இணையக்கூடாது. அவ்வாறு இணைபவர்களை 'இனத்துரோகி' என்று நானே முத்திரை குத்துவேன் - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## எரிபொருளுக்காக...

களுக்கு முன்பாக வரிசைகளில் காத்திருக்க வேண்டாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஜனாதிபதி...

பக்ஷவின் இராஜிநாமா கடிதத்தை பாராளுமன்றத்தின் செயலாளர் தம்மிக தசநாயக்க சபையில் வாசித்தார்.

வரும் 19ஆம் திகதி காலை 10 மணிக்கு சபை கூடியதும் ஜனாதிபதி பதவிக்கான வேட்புமனுக்களை தன்னிடம் சமர்ப்பிக்குமாறு செயலாளர் நாயகம் சபையில் அறிவித்தார்.

ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் வேட்புமனுக்களை அளித்தால் ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இதைத் தொடர்ந்து சபையை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஒத்திவைக்கப்பட்டது. இந்த அமர்வு 13 நிமிடங்களே நீடித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய ஜனாதிபதி தெரி...

அரசமைப்பு ரீதியில் ஒரு வேட்பாளர் வெளிவரவேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்கத் திட்டமிடுகின்றனரா இல்லையா என்பது உட்பட நாட்டின் தற்போதைய நெருக்கடியை தீர்க்க எவ்வாறு திட்டமிடுகிறார்கள் என்பதை விளக்க வேண்டும்.

அத்தியாவசிய மருந்துகள், உணவு, எரிபொருள் மற்றும் உரம் போன்றவற்றின் பற்றாக்குறையையும் எவ்வாறு தீர்க்க திட்டமிட்டுள்ளோம் என்பதையும் ஜனாதிபதி வேட்பாளர்கள் விளக்க வேண்டும் - என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார். (ஐ)

## அவசர நிவாரண...

பிக்க பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

நேற்றுக் காலை அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் சமர்ப்பிக்கப்படும் நிவாரண வரவு - செலவு திட்டத்தில் இருந்து கூடுதல் நிதியை இதற்காக பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், உணவு பாதுகாப்புத் திட்டத்தின் நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும், செயல்முறையை வலுப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, எரிபொருள் மற்றும் உரங்களை முறையாகவும் துரிதமாகவும் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. வர்த்தகர்கள் தமது தொழிலை தடையின்றி நடத்துவதற்கு தேவையான சூழலை தயார்படுத்துவது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

அமைதியான போராட்டத் தலைவர்களால் கையளிக்கப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் பேரவை நல்லதொரு தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஊழலை தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து போராட்டக்காரர்களுக்கு அறிவிக்கப்படும் - என்றும் பதில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 - 03 - 1953

இறப்பு 15 - 07 - 2022

### அருளப்பாபிள்ளை சிவராசா (சங்கீதா ராஜன்)

காரைநகர் சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும், நீராவியடி, பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட அருளப்பாபிள்ளை சிவராசா 15-07-2022 வெள்ளிக் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற அருளப்பாபிள்ளை, - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - வியாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சத்தியதேவி அவர்களின் பாசமிகு கண வரும், பிரதீபன், சிந்துஜா, நிலானி, பிரியங்கா ஆகி யோரின் அன்புத் தந்தையும்,கோகுலரூபன், நிவேதிக்கா ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்றவர்க ளான உமாதேவி, கிருஸ்ணமூர்த்தி, சுந்தரமூர்த்தி, தியாக ராசா மற்றும் தவராசா(டென்மார்க்), உத்தரை(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற கன கேந்திரம் மற்றும் சொரூபராணி(டென்மார்க்), பாலகௌரி (டென்மார்க்), மனோரஞ்சனி(டென்மார்க்), காலஞ்சென்ற சரஸ்வதிதேவி மற்றும் சிவபுண்ணியம், சிவசுப்பிரமணி யம், சிவஞானம், சரோஜினிதேவி, சிவபாதம், சகுந்தலா தேவி, சாராதேவி, சாவித்திரிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,ஷர்னித், யஷ்வந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

தகவல்:
**தவராசா** (சகோதரன்)

*தொடர்புகளுக்கு :*
**பிரதீபன் - மகன்**
Mobile : +94762288197
**தவராசா - சகோதரன்**
Mobile : +4525936661
**உத்தரை - சகோதரி**
Mobile : +14163177769

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 13 - 04 - 1938

ஆண்டவன் அடியில் 12 - 07 - 2022

### வைத்திலிங்கம் பரராஜசிங்கம்

நெல்லியடி குறுந்தட்டியைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி வியாளாவத்தை, கொழும்பு, பிரித்தா னியா Harrow ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பரராஜசிங்கம் அவர்கள் 12.07.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற வல்லிபுரம் – தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற நிர்மலாதேவி அவர் களின் ஆருயிர்க் கணவரும்,காலஞ்சென்ற தவ மணி, பூபாலசிங்கம், கனகசிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை, தூமணி மற்றும் நவமணி, காலஞ்சென்ற சிவநாதன் ஆகியோரின் மைத் துனரும்,பாமதி, மதிவண்ணன், பாரதா ஆகியோ ரின் பாசமிகு தந்தையும்,ராஜ்மோகன், சுகன்யா, கருணாநிதி ஆகியோரின் அன்பு மாமனா ரும், நிவேதா, பிரவீன், சஞ்ஜெயன், யாதவன் ஆகியோ ரின் ஆருயிர்ப் பேரனும் ஆவார்.

*கிரியை :*
Sunday, 24 Jul 2022 7:00 AM - 9:30 AM
Kenton Kindergarten 387 Kenton Rd, Harrow HA3 0YG, United Kingdom

*தகனம்:*
Sunday, 24 Jul 2022 10:00 AM
Hendon crematorium Holders Hill Rd, London NW7 1ND, United Kingdom

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மதிவண்ணன் (மகன்)**

*தொடர்புகளுக்கு :*
**மதிவண்ணன் - மகன்**
Mobile : +447775797087
Phone : +442084279852
**பாமதி - மகள்**
Mobile : +447525724554
Phone : +442088647460
**பாரதா - மகள்**
Mobile : +61499442909
Phone : +61412566676

## மரண அறிவித்தல்



பிறப்பு 03 - 09 - 1938

இறப்பு 14 - 07 - 2022

### திருமதி இராஜேஸ்வரி கந்தையா

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)*

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், கனடா Markham, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாக வும் கொண்ட இராஜேஸ்வரி கந்தையா 14.07.2022 வியாழக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் (கொடிவேலு விதானையார்) – செல்லம்மா (இலங்கையின் முதலாவது பெண் கிராமசங்கத் தலைவி) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகேந் திரர் நாகமுத்து தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற கந்தையா நாகேந்திரர் (கிராமசேவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கிருபாராணி(ஐக்கிய அமெரிக்கா), ஜயந்தி(கனடா), யோகேஸ்வரி(கனடா), நாகேந்திரா(டென்மார்க்), கலைவாணி(கனடா), திரு மகள்(உருத்திரா- கனடா), கஜேந்திரா (கனடா), மலை மகள்(ஜனா- கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (கிராமசேவை யாளர்), அமிர்தரட்ணராஜா(அதிபர்), இராமநாதன் (பொறியியலாளர்), செல்வரட்ணம்(எழுதுவினைஞர்) மற்றும் நாகேஸ்வரி(கிளி- முன்னாள் ஆசிரியை), இராமச் சந்திரன்(முன்னாள் நெடுந்தீவு உப அரச அதிபர்), இலட் சுமணராஜா(முன்னாள் புதை பொருள் ஆராய்சியாளர், பத்திரிகையாளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நவயோகம், காலஞ்சென்ற முருகேசு ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும்,ஜெயன்(தேன்) பிள்ளை, ஸ்ரீரஞ்சன், லோகேந்திரன்(K.V.செல்வன்), கஜபாலினி, இராஜ் மோகன், பஞ்சலிங்கம், மைதிலி, ரஜிகரன் ஆகி யோரின் பாசமிகு மாமியாரும்,ரவிவர்மன்(வருண்), சரண்யா, ஸாகித்தியா, ஜனகன், கார்த்திகன், கபிலன், கஜந் (நாகேந்திரர்), கஜனா(தேந்திரா), ஹரேந்திரா, ஸ்ரீமன், ஆதினி, பிரணவி, வர்ணவி, வாரணன், கவின், கஜானன், தாமிரா, சாய்மிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சற்குணம் (ஆசிரியை), அமிர் தம் மற்றும் அன்னலட்சுமி, ஞானாம்பிகை, யோகம்மா (முன்னாள் ஆசிரியை), காலஞ்சென்றவர்களான சுவாமி நாதன் (சமாதான நீதவான்), நாகபூசணி, கௌரி (ஆசிரியை) ஆகியோரின் அருமை மைத்துனியும், நாகம்மா, காலஞ்சென்ற யோகம்மா மற்றும் கண்மணி, பசுபதிப் பிள்ளை, பேரம்பலம், காமாட்சி, தனபாக்கியம், விஜயரட் ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

● அன்னார், ‘ஊரும் உறவும்’ கவிதை கட்டுரையை தனது 80ஆவது வயதில் வெளியிட்டார். இவர் கனடா இந்து மாமன்றத்தின் உறுப்பினருமானார்.

*பார்வைக்கு :*
Sunday, 17 Jul 2022 4:00 PM - 9:00 PM
Monday, 18 Jul 2022 7:30 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை :*
Monday, 18 Jul 2022 8:30 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

*தகனம்:*
Monday, 18 Jul 2022 10:30 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **கிருபா** (மகள்)

*தொடர்புகளுக்கு*
**கிருபா - மகள்** - Mobile : +17165330387
**ஜயந்தி - மகள்** - Mobile : +14168503301
**யோகி - மகள்** - Mobile : +16479622381
**நாகேந்திரா - மகன்** - Mobile : +4528929723
**வாணி - மகள்** - Mobile : +14164198800
**உருத்திரா - மகள்** - Mobile : +14167067884
**கஜன் - மகன்** - Mobile : +16136141960
**ஜனா - மகள்** - Mobile : +14168343568

## மரண அறிவித்தல்



பிறப்பு 17.05.1961

பிறப்பு 05.07.1938

### நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்

வல்வெட்டியை பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் அவர்கள் 05-07-2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் – சின்னக்கிளி தம்பதிகளின் அன்பு மக னும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சதாசிவம் மற்றும் சிவபாலசுந்தரம், அருளானந்தம், பஞ்சலிங்கம், சிறிமுருகன் ஆகியோரின் அன் புச் சகோதரரும், காலஞ்சென்ற நாகலிங்கம் அவர்களின் அன்பு மைத்துனரும்,நாகேஸ்வரி(கௌரி- இந்தியா), கணேஸ் (பிரான்ஸ்), ஸ்ரீலக்சுமிதேவி (கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

*பார்வைக்கு :* Tuesday, 19 Jul 2022 11:30 AM - 1:00 PM
Hospital Simone Veil (Hôpital Simone Veil) 14 Rue de Saint-Prix, 95600 Eaubonne, France
*கிரியை :* Tuesday, 19 Jul 2022 2:00 PM
Cimetière Intercommunal des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

தொடர்புகளுக்கு
**நாகேஸ்வரி(கௌரி) - மருமகள்** Mobile : +919698205253
**ஸ்ரீலக்சுமிதேவி(ஞானம்) - மருமகள்** Mobile : +14162912426
**கணேஸ் - மருமகன்** Mobile : +33667332202

தகவல்:
**கணேஸ் - மருமகன்**

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-ஜெமினி
4.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-
திறமையாளர்களுக்கான களம்



**இரவு**
7.00 மணி : SPOTLIGHT- சட்டத்தரணி
என்.ஸ்ரீகாந்தா
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## சக்தி டிவி

**காலை**
05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள்
(மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம்
(திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை
(மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு